janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஏப்ரல் 10 - 16 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 01




**நேட்டோ கலைக்கப்பட...**

'ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே தற்போது நடைபெற்று வரும் இராணுவ மோதலில் ஒரு அமைப்பின் மீது அனைவரது கவனமும் குவிந்து வருகிறது. அந்த அமைப்பின் பெயர் >>>



ப 08

**எங்கே சென்றாய் அழகு!**

உனது முழுப் பெயரான அழகு முத்து பாண்டியன் என அழைத்தது இல்லை. அழகு என்றும், அழகுமுத்து என்றும் சுருக்கமாக, செல்லமாக அழைத்தோம். கட்சியின் செல்லப் பிள்ளையாகவே >>>



ப 02

**தமிழகத்தில் மார்க்சியப்...**

மார்க்சியம் தோன்றிய காலத்தில் இருந்தே அதுபற்றிய விவாதங்கள் அதிகமாக இடம் பெற்று வந்துள்ளன. மார்க்சியம் பற்றிய விமர்சனங்களுக்கு மார்க்சும், ஏங்கல்சும் பல கடிதங்கள் மூலமாகவும் அவர்களது பல நூல்களிலும் மறுப்புத் தெரிவித்து >>>



ப 05

# விலைவாசியை கட்டுப்படுத்துவதில் ஒன்றிய அரசு படுதோல்வி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு

பாஜக ஒன்றிய அரசு பன்னாட்டு நிதி மூலதன சக்திகளுக்கும், பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் ஆதரவானக் கொள்கையை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. கார்ப்பரேட்டுகளுக்கு வரி சலுகை வழங்கி வரும் பாஜக ஒன்றிய அரசு, மறைமுக வரி செலுத்தி வரும் உழைக்கும் மக்களை கசக்கி பிழிந்து பெருந்தொகை வசூலித்து வருகிறது. ஜிஎஸ்டி வரி விதிப்பின் மூலம் மாநிலங்களின் நிதி ஆதாரத்தையும் ஆக்கிரமித்துள்ளது. இந்த நிலையில் கடந்த 137 நாட்களாக பதுங்கியிருந்த ஒன்றிய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் 9 நாட்களில் பெட்ரோல் விலை 6 ரூபாய் 54 காசுகள் உயர்த்தியுள்ளது. இது இன்னும் சில நாட்கள் தொடர்ந்து ரூ.20 வரை உயரும் எனக் கூறப்படுகிறது. டீசல் விலையினையும் தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

பொருள் போக்குவரத்து வாடகை உயர்வில் தொடங்கி அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அனைத்தின் விலைகளும் உயர்ந்து வருகின்றன. சமையல் எரிவாயு விலையை சிலிண்டருக்கு ரூ.50/= உயர்த்தி விட்டது. நோய்த் தொற்று பரவல் காலத்தில் கடுமையான வாழ்க்கை நெருக்கடியில் சிக்கி தவித்து வரும் மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்வராத ஒன்றிய அரசு, 800 மருந்துகளின் விலைகளை 10.7 சதவிதம் உயர்த்தியுள்ளது. இடிமேல் இடியாக விழுந்து வந்த விலைவாசி உயர்வின் தொடர்ச்சியாக தேசிய நெடுஞ்சாலைகளில் வசூலிக்கப்படும் சுங்கக் கட்டணத்தை ரூ.40 வரை உயர்த்தியுள்ளது.


பாஜக ஒன்றிய அரசு விலைவாசியை கட்டுப்படுத்துவதில் படுதோல்வி அடைந்துள்ளது. தேர்தல் நேரங்களில் வாக்காளர்களை வஞ்சமாக ஏமாற்றி அதிகாரத்தில் தொடரும் பாஜகவின் அரசியல் சதி விளையாட்டை அதன் விலைவாசிக் கொள்கை 'உள்ளங்கை நெல்லிக் கனியாக' வெளிப்படுத்தி வருகிறது. மக்கள் வாழ்க்கை நலனையும், தரத்தையும் கடுமையாக பாதிக்கும் விலைவாசி உயர்வுக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு போராட முன் வரவேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

**எதிரும் புதிரும்**

தமிழக அரசு பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்க வேண்டும்

– ஓ.பன்னீர்செல்வம்




உங்க ஓனர் ஏற்றியதைப் பற்றி பேசுனா குறைந்தா போய்விடுவீர்கள்!

**தலித் உரிமைகள் இயக்கம்**

**தேசியக் குழு கூட்டம்**

**ஏப்ரல் 29, 30 - 2022, வியாசர்பாடி, சென்னை**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் எஸ்.அழகுமுத்து பாண்டியன் மறைவு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர், வழக்கறிஞர் எஸ்.அழகுமுத்து பாண்டியன் (72) மார்ச் 04 அன்று பிற்பகல் 03.50 மணிக்கு மதுரை, மருத்துவமனையில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரில் உள்ள சங்கரலிங்கபுரத்தில் வசித்து வந்த சண்முக தேவர் – சீதையம்மாள் தம்பதியருக்கு 1949 அக்டோபர் 14 ஆம் தேதி ஐந்தாவது குழந்தையாக, ஐந்து சகோதரர்கள் மற்றும் மூன்று சகோதரிகளுடன் பிறந்தவர் எஸ்.அழகுமுத்து பாண்டியன். சண்முக தேவர் கோவில்பட்டியில் இயங்கி வந்த நூற்பாலை தொழிலாளியாக பணியாற்றியவர். தொழிற்சங்க இயக்கத்தில் முனைப்பாக செயல்பட்டு வந்தவர்.

எஸ். அழகுமுத்துபாண்டியன் குடும்ப சூழலில் இடதுசாரி கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு பள்ளியில் பயின்று வந்த காலத்தில் மாணவர் பெருமன்ற அமைப்பில் இணைந்து செயல்படத் தொடங்கியவர். இளைஞர் பெருமன்றத்திலும் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியவர்.

சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞராக பணியாற்றியவர். கூட்டுறவு அமைப்பில் பணியில் சேர்ந்து பணிபுரிந்த காலத்தில், பணியாளர்களை அணிதிரட்டி மாநில அளவில் சம்மேளனம் அமைப்பதில் முக்கியப் பங்காற்றியவர்.

ஏஐடியூசி தொழிற்சங்க அமைப்பில் செயல்பட்டு, தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பொறுப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறார். கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் பொறுப்பிலும் செயல்பட்டு வந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் மூச்சிரைப்பு காரணமாக மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தவர். சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

எஸ்.அழகுமுத்து பாண்டியன் வாழ்விணையர் காசிபாரதி ஓய்வு பெற்ற ஆசிரியர். இவர் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணுவின் மூத்த மகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு கண்ணம்மா என்ற மகளும், நல்லாள் என்ற பேத்தியும் இருக்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை வழியில் உறுதியாக பயணித்த நல்ல செயல்வீரரை கட்சி இழந்து நிற்கிறது.

தோழர் எஸ்.அழகுமுத்து பாண்டின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு செங்கொடி தாழ்த்தி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் மூத்த தலைவர்

தொடர்ச்சி 3ம் பக்கம் >>

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களின் மருமகனும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளருமான எஸ்.அழகுமுத்து பாண்டியன் அவர்கள் உடல் நலக்குறைவால் மார்ச் 4 அன்று இயற்கை எய்தினார். இச்செய்தியறிந்ததும் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் எஸ்.அழகுமுத்து பாண்டியன் உடல்நலக்குறைவால் மறைந்தார் என்று அறிந்து மிகவும் வருந்தினேன். கொள்கைப் பற்றுமிக்க தோழரை இழந்து வாடும் பொதுவுடைமை இயக்கத் தோழர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருமகனை இழந்து தவிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்ததலைவர் ஐயா இரா. நல்லகண்ணு அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



# எங்கே சென்றாய் அழகு!





இரா.முத்தரசன்

**உனது முழுப் பெயரான அழகு முத்து பாண்டியன் என அழைத்தது இல்லை.**

அழகு என்றும், அழகுமுத்து என்றும் சுருக்கமாக, செல்லமாக அழைத்தோம். கட்சியின் செல்லப் பிள்ளையாகவே பவனி வந்தாய்.

கட்சியின் இளம் தோழர்கள் பலரும் மாமா என்று செல்லமாக உறவுமுறை வைத்து உரிமையோடு அழைத்ததையும், அவர்களை மாப்பிள்ளை என்று நீ செல்லமாக அழைத்ததையும் பற்பல நேரங்களில் பார்த்து ரசித்து இருக்கிறோம்.

சிலர் மச்சான் என்று உன்னை அழைப்பதையும், பதிலுக்கு என்ன மச்சான் என்ன சொல்றீக என்று நீ உன் மாவட்ட மொழியில் பேசுவதையும் கேட்டு ரசித்து இருக்கின்றோம்.

கடும் சொல்லையோ, தடித்த வார்த்தைகளையோ நாம் அறிந்த வரையில் ஒருபோதும் நீ பயன்படுத்தி பார்த்தது இல்லை.

எந்நேரமும் சிரித்த முகத்தோடுதான் அழகுவை பார்த்து இருக்கின்றோம்.

உனது குடும்பம் பெரிய குடும்பம். உனது தந்தை சண்முகத் தேவர் – தாயார் சீதையம்மாள் ஈன்றெடுத்த எட்டு குழந்தைகளில் நீயும் ஒருவர்.

உன்னையும் சேர்த்து ஐந்து ஆண்மக்கள் மூன்று சகோதரி களைக் கொண்ட பெரும் குடும்பம்.

1949ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ஆம் நாள் ஐந்தாம் குழந்தையாக பிறந்தாய்.

உனது தந்தை சண்முகத் தேவர் கோவில்பட்டியில் இயங்கி வந்த நூற்பாலையில் தொழிலாளியாக பணியாற்றியது மட்டுமின்றி தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக அணி திரட்டி சங்கம் கண் டவர்.

முற்போக்கான தந்தையைப் பின்பற்றி படிக்கும் பொழுதே மாணவர் பெருமன்றத்தில் இணைந்து பணியாற்றி, அதனைத் தொடர்ந்து அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்திலும் பணியாற்றி பரிணமித்த நீ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து பணியாற்றினாய்.

கூட்டுறவு அமைப்பில் பணியில் சேர்ந்து பணி புரியும் காலத்தில் மாநில அளவில் கூட்டுறவுப் பணியாளர்களை அணி திரட்டுவதிலும், மாநில அளவில் சம்மேளனம் அமைப்பதில் பெரும் பங்காற்றினாய்.

சட்டக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்று வழக்கறிஞராகவும் திறம்பட பணியாற்றி ஏழை, எளிய மக்களுக்கு, விவசாயிகளுக்கு, சட்டரீதியாக அவர்களுக்கு நியாயங்களையும், உரிமைகளையும் பெற்று தந்தாய்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றி பல் வேறு பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றுவதற்கு முன்பு, மாவட்ட செயலாளராக இருந்த தோழர்கள் அய்யலுசாமி, மோகன்ராஜ் போன்ற தோழர்களுக்கு மிகவும் உதவியாக இருந்து பணியாற்றியதை நன்கறிவோம்.

தோழர் எம்.அப்பாதுரை தென்காசி தொகுதியில் நாடாளுமன்ற வேட்பாளராக நின்ற போது அவரது வெற்றிக்கு பெரும் உதவி செய்ததை அறிவோம்.

திருவைகுண்டம் இடைத்தேர்தலில் ஏறத்தாழ ஒரு மாத காலம் தொகுதியில் குடும்பத்தோடு முகாமிட்டு கட்சியின் வேட்பாளர் வெற்றிக்கு அயராது உழைத்ததை மறக்க இயலாது.

தூத்துக்குடி மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்டத்தில் கட்சியை பலப்படுத்துவதில் காட்டிய அக்கறையை அறிவோம்.

கோவையில் நடைபெற்ற மாநில மாநாட்டில், மாநில நிர்வாகக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றுவரை அப்பொறுப்பில் சிறப்பாக பணியாற்றியதையும் மாநில நிர்வாகக் குழு, மாநிலக் குழு கூட்டங்களில் தவறாமல் பங்கேற்று விவாதங்களில் தனது கருத்துக்களை கூறி முடிவுகள் மேற்கொள்ள உதவியாக இருந் தாய்.

மாநிலக் குழு கூட்டத்தை தூத்துக்குடியில் நடத்திட வேண்டும் என்று கேட்டபொழுது நடத்தி விடுவோம் என பதிலுரைத்து சிறப் பாக மாநில நிர்வாகக் குழு, மாநிலக்குழு கூட்டங்களையும், பொதுக் கூட்டத்தையும், கலை நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்தியது இன்றும் நெஞ் சில் நிழலாடுகின்றன.

எப்பொழுதும் கட்சிக்கு கட்டுப்பட்டு, கட்சி முடிவுகளை நிறை வேற்றும் ஆற்றல் மிக்க செயல் வீரனாக திகழ்ந்தாய்.

தூத்துக்குடி மாவட்டம் மட்டுமின்றி அருகிலுள்ள நெல்லை மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கும் உதவி செய்தாய்.

நடந்து முடிந்த நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தலில் தமிழ் நாட்டில் முதல் ஒப்பந்தம் நீ தான் மேற்கொண்டாய். தொலைபேசி வாயிலாக தெரிவித்த போது மகிழ்ச்சியாக இருந்தது.

ஒரு மாநகர மாமன்ற உறுப்பினரையும், ஒரு நகர்மன்ற உறுப்பி னரையும் வெற்றி பெறச்செய்து கட்சிக்குப் பெருமை சேர்த்தாய்.

கோபிசெட்டிபாளையத்தில் கட்டப்பட்டு வரும் தியாக சீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டட நிதிக்கு தூத்துக்குடி மாவட்டத் திற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை முழுவதையும் வசூலித்து மாநில மையத்தில் செலுத்த வேண்டும் என்பதில் நீ காட்டிய ஆர்வத்தை எண்ணி மகிழ்கின்றோம்.

தனிநபர் வசூலுக்கு இரண்டு தினங்கள் தலைவரை (ஆர்.என்.கே.) அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டபோது, ஏன் நீங்களே தலைவர் இடத்தில் பேசி தேதி கேட்க வேண்டியதுதானே என்று பதிலுரைத்த போது, அது எப்படி நான் கேட்பது? மாநில தலைமை தான் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். நான் நேரடியாக தலைவரை கேட்பது கட்சி முறையல்ல என்று கூறி பாடம் நடத்தி, எங்களுக்கு தலைமை பண்பை வெளிப்படுத்தினாய்!

பெருமளவிற்கு நிதி வழங்கியது மட்டுமில்லாமல், மீண்டும் வசூல் செய்திடவேண்டும், நூறு பேர் கொண்ட பட்டியல் தயாரித் துள்ளோம், இரண்டு நாள் வசூலுக்கு வர வேண்டும் என்று கோரிய பொழுது, மாநிலக் குழு கூட்டம் முடிந்த பிறகு வசூல் செய்யலாம் என்று தெரிவித்தோம்.

கட்சியின் மாநில நிர்வாகக் குழு, மாநிலக் குழுக் கூட்டங்கள் மார்ச் 17 முதல் 20 வரை நாகப்பட்டினத்தில் நடைபெற்றபோது முழுமையாக பங்கு பெற்றதுடன், வசூலுக்கு தேதி வேண்டும் என நினைவூட்டினாய்!

நீ கலந்து கொள்கிற கூட்டம் இதுவே கடைசி கூட்டம் என்பதை நினைத்துக்கூட பார்க்கவில்லை.

அரை நூற்றாண்டு காலம் பொதுவுடமை இயக்கத்தில் இணைந்து அயராது பணியாற்றினாய்.

மதிப்புமிக்க தலைவர் தோழர் இரா. நல்லகண்ணுவின் மூத்த மகளான காசிபாரதியை மணம் முடித்தாய். இல்லற வாழ்க்கையில் கணவன் – மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தாய்!

பாரதியிடம் ஒருபோதும் நான் வம்பு சண்டை செய்தது கிடை யாது என்று பெருமை பொங்க ஒரு முறை அல்ல, பல முறை கூறி மகிழ்ந்ததை நினைத்து நினைத்து பெருமை கொள்கிறோம்.

ஆசிரியையாக, தலைமை ஆசிரியையாக பணியாற்றி பணி ஓய்வு பெற்ற நிலையில் உன் நினைவாகவே இன்றும் இருக் கின்றார் பாரதி.

**இரண்டு மகள்களை பெற்ற நீ, மூத்த மகள் சண்முகா பாரதியை இழந்ததால் ஏற்பட்ட துயரத்தில் நீ மட்டுமல்ல, செல்லப் பேத்தியை இழந்துவிட்டோம் என்ற மனவருத்தத்தை இன்றும் தோழர் ஆர்.என்.கே. சுமந்து கொண்டு இருப்பது பலருக்கும் தெரியாத உண்மையாகும்.**

இரண்டாவது செல்லமகள் கண்ணம்மாள்–உனக்கு மட்டு மல்ல, கட்சித் தோழர்கள் அனைவருக்கும் கண்ணம்மாள் செல்ல மகளே! மகள் கண்ணம்மாளை நன்கு படிக்க வைத்து அவரையும் வழக்கறிஞராக்கி அழகு பார்த்து மகிழ்ந்தாய்.

கண்ணம்மாள் மட்டுமல்ல, ஆண்டாளின் பிள்ளைகள் சதீஷ், பிரியாவையும் தனது பிள்ளைகளாகவே பார்த்தாய்.

தனது குடும்பத்தில் உள்ள மனைவி, மகள் என அனைவரையும் கட்சியில் உறுப்பினராக சேர்த்து எங்கள் குடும்பம் கட்சி குடும்பம், கம்யூனிஸ்ட் குடும்பம் என்று பெருமைப்பட்டாய்!

கடந்த மாதம் மார்ச் 27 அன்று உடல்நலம் பாதிப்பு குறித்து மருத்துவர் தோழர் அறம் அவர்களின் சாத்தூர் மருத்துவமனைக்குச் சென்று, அவரது ஆலோசனை, அறிவுறுத்தலின்படி மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாய்.

குடும்பமே மருத்துவமனையில் உனக்காக காத்து நின்றது. நலம் பெற்று திரும்புவாய் என்று நம்பிக்கையோடு காத்திருந்தோம்.

29ம் தேதி பகல் 12 மணிக்கு தோழர்கள் க.சந்தானம், எஸ்.குணசேகரன், பா.காளிதாஸ் இவர்களோடு உன்னை மருத் துவமனையில் சந்தித்தபோது, இரு கரங்களையும் குவித்து கும்பிட்டு வழக்கமான புன்சிரிப்போடு வரவேற்றதையும், நல மாக இருக்கிறேன், ஜெயித்து விடுவேன் என்பது போன்று, வலது கையை மடக்கி, கட்டை விரலை நீட்டி வெற்றியை வெளிப்படுத்தியது மட்டுமல்ல, கட்சி உறுப்பினர் கணக்கு முடித்து, பணம், பட்டியல் அனுப்பிவிட்டேன் வந்துவிட்டதா? எனக் கேட்டு, வரவில்லை என்றால் கே.எஸ்.சத்தம் போடுவார் என்று மருத்துவமனையில் இருந்து கொண்டே பொறுப்போடு கட்சி பணியாற்றியதை என்னவென்று கூற!

உன் முடிவு குறித்து உனக்கு தெரிந்துவிட்டது போலும், அத னால் தான் எல்லோரையும் பார்க்க வேண்டும், குழந்தைகள், மருமகன்கள், தலைவர் மற்றும் ஆண்டாள் அனைவரையும் வரச் சொல் என்று கண்ணம்மாவிடம் கூறியதைக் கேட்டு அனை வரையும் வரச் செய்தோம்.

அனைவரும் வந்து பார்த்தார்கள். எல்லோரும் ஒற்றுமையாக இருங்கள் என குடும்பத் தலைவர் என்கிற பொறுப்புணர்வுடன் கூறினாய்! மகன் சதீஷ் இடம் எல்லோரையும் கவனித்துக் கொள், நீதான் பொறுப்பு என்று உனது பொறுப்பை சதீஷிடம் ஒப்படைத்தாய்.

தலைவர் நல்லகண்ணு அவர்களும், மகள் ஆண்டாளும் விமானம் மூலம் விரைந்து வந்தனர்.

இருவரும் மருத்துவமனையில் இருந்த உன்னை சந்தித்த போது, ஆர்.என்.கே.யை கரம் குவித்து கும்பிட்டு நன்றாக இருக்கிறேன், கவலைப்படவேண்டாம், இரண்டு நாட்களில் வந்து விடுவேன் என நம்பிக்கையூட்டினாய்!

ஏப்ரல் 2ஆம் நாள் தோழர் காளிதாசுடன் வந்து பார்த்தபோது என்ன இங்கேதான் சுற்றிக்கொண்டு இருக்கின்றீர்களா? காளி தாசுக்கு என்னால் மிகவும் சிரமம், பாவம் அவர் என்று கூறினாய்.

காலையில் தோசை சாப்பிட்டேன், காபி குடித்தேன், நன்றாக இருக்கிறேன், இரண்டொரு நாளில் வந்து விடுவேன் என நம்பிக்கை ஊட்டினாய்.

உன்மை நம்பி இருந்தோம், நலமுடன் வருவாய், மீண்டும் பணிகளை மேற்கொள்வாய் என்று நம்பிக்கையோடு இருந்தோம். எங்களின் நம்பிக்கையை பொய்யாக்கி விட்டு ஏப்ரல் 4ஆம் தேதி மாலை விடைபெற்று சென்று விட்டாய்!

மார்ச் 27ஆம் தேதி உன்னுடன் மருத்துவமனைக்கு வந்த பாரதியும், கண்ணம்மாவும், சதீசும் உன்னை குணமாகி வீட்டிற்கு அழைத்துச் செல்வோம் என்ற நம்பிக்கை பொய்யாகி, உன்னை சுமந்து செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

உனது செல்ல பேத்தி நல்லாள் தாத்தா எங்கே என்று கேட் கின்றாள் என்ன பதில் சொல்ல அழகு!

உனக்கு மாமனாராக இல்லாமல் தலைவராக விளங்கி வருகின்ற, பல சுமைகளை சுமந்து நிற்கின்ற, தலைவர் நல்ல கண்ணுவிற்கு யார் ஆறுதல் கூறுவது? என்று தெரியவில்லையே அழகு !நீ வருவாயா? ஆறுதல் கூறுவாயா?

உன் வாழ்நாள் முழுவதும் உன்னுடன் இணைந்து உன் மனம் கோணாமல் நிமிடத்திற்கு நிமிடம் மாமா, மாமா என்று புன்னகை முகத்தோடு உன்னை அழைத்து மகிழ்ந்த பாரதியை நிர்கதியாய் விட்டுவிட்டு சென்று விட்டாயே! பாரதிக்கு யார் ஆறுதல் கூறுவது? நீ வருவாயா அழகு?

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கட்சித் தோழர்கள் என அனைவரும் கலங்கி நிற்கின்றனர்.

அவர்களின் கண்ணீரை துடைக்க நீ வருவாயா?

வரமாட்டாய், இயற்கை உன்னை வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொண்டது.

இயற்கையை எவராலும் வெல்ல முடியாது என்பதை அறிவோம்!

ஆனாலும், அழகு உன்னை எங்களின் நெஞ்சங்களில் என்றும் சுமந்து நிற்போம்!

எங்களின் உயிரை இயற்கை பறிக்கும் வரையில் உன்னை எங்களின் நெஞ்சங்களில் இருந்து எவரும் பிரிக்க முடியாது.

உனது வாழ்க்கையை மிக உயரிய இலட்சியத்திற்காக அர்ப் பணித்துக்கொண்டாய். நீ ஏற்றுக் கொண்ட மகத்தான இலட்சியம் நிறைவேற , வெற்றிபெற உன் பெயரால் சபதமேற்போம்.

நீ கம்பங்களில் உயர்த்திய செங்கொடி உனக்காக கண்ணீர் வடித்து தாழப் பறக்கின்றது.

உன் உடல்மீது இரத்த செங்கொடி போத்தப்பட்டுள்ளது.

உன் திருநாமம் என்றென்றும் ஜொலித்து நிற்கும்! உன் புகழ் ஓங்கட்டும்! உன் லட்சியக் கனவுகள் நிறைவேறும்! இது உன் மீது சத்தியம்!

எங்களுடன் வாழ்வாய், வாழ்ந்து கொண்டே இருப்பாய் அழகு! அழகு உனக்கு எங்களின் வீர வணக்கம்!

# கம்யூனிஸ்ட் நேர்மைக்கு எடுத்துக்காட்டு தோழர் வி.செங்காளியப்பன்






இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான மறைந்த வி. செங்காளியப்பன் படத்திறப்பு விழா கோவை சரவணம்பட்டியில் எஸ்.ஆர்.கோபால் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு செங்காளியப்பன் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசும்போது:

பொது வாழ்வு என்பது மிக மிக புனிதமானது, நம்முடைய முன்னோர்கள் அழியா புகழை சேர்த்து வைத்துவிட்டு போயிருக்கிறார்கள். பொதுவாழ்வில் இருப்பவர்கள் சிலர் ஏராளமான சொத்துக்களை சேர்த்து இருக்கிறார்கள், அதை அவர்கள் எடுத்துக் கொண்டு போகப் போவதில்லை. இந்த சொத்து எங்கிருந்து வந்தது? என்று கேள்வி எழுப்பப்படுமானால் அவர்களால் நேர்மையாக பதில் கூற முடியாது.

ஆனால் இங்கே தோழர் செங்காளியப்பன் குறித்து சி. சிவசாமி கூறினார்.

எண்பதுகளில் சரவணம்பட்டி பகுதியில் நிலவிய குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தோழர் செங்காளியப்பன், செல்லகுட்டி, கோபால் ஆகிய மூன்று தோழர்கள் முன்னின்று பொதுமக்களிடம் வசூலித்து 50 சென்ட் நிலம் வாங்கி, அங்கே கிணறு வெட்டி குடிநீர் விநியோகம் செய்தார்கள்.

இதற்காக வாங்கப்பட்ட நிலம் செங்காளியப்பன் பெயரில் பொது பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டது. பிற்காலத்தில் நமது தோழர்கள் இந்த இடம் உங்கள் பெயரில்தான் உள்ளது இங்கே நாம் கட்சி அலுவலகம் கட்டிக் கொள்ளலாம் என்று கேட்ட போது, இது பொது பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட நிலம் இதில் கட்சி அலுவலகம் கட்ட சம்மதிக்க மாட்டேன்.

வேண்டுமானால் வேறு ஒரு இடத்தில் கட்சிக்கு கட்டிடம் கட்டிக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார். கோவை மாநகரத்தில், சரவணம்பட்டியில், முக்கியமான வீதியிலுள்ள கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிலத்தை பொது பயன்பாட்டுக்காக வாங்கப்பட்டதை ஒரு அடி நிலத்தை கூட தனக்கு என்றோ, தனது கட்சிக்கு என்றோ எடுத்துக் கொள்ள சம்மதிக்காதவர் செங்காளியப்பன்.

வேறொருவராக இருந்தால் அந்த நிலம் மட்டுமல்ல, பக்கத்தில் இருக்கும் நிலத்தையும் சேர்த்து ஆக்கிரமித்து இருப்பார்கள்.

ஆனால் தோழர் செங்காளியப்பன் அப்படி நடந்து கொள்ளவில்லை, 'இதுதான் கம்யூனிஸ்ட் நேர்மை' என்பது.

இவர் கல்லூரியில் படித்தவர் இல்லை மில் வேலைக்கு சென்றவர் சங்கம் வைத்து தொழிலாளர்களுக்காக போராடியவர். சங்கம் வைக்க உரிமை இல்லை என்று மில் முதலாளிகள் அச்சுறுத்தி வந்த காலத்தில், அமைப்பில் இணைந்து பணியாற்றிய தோழர்கள் இவர்கள். கம்யூனிஸ்ட் கட்சி புதிய வரலாற்றைப் படைக்க நேர்மையாகவும் உண்மையாகவும் உழைக்கும் இதுபோன்ற தொண்டர்களை தான் பெற விரும்புகிறது.

கடந்த மாதம் 27, 28 ம் தேதிகளில் நாடு தழுவிய அளவில் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் நடத்தின, அந்த வேலை நிறுத்தத்திற்கு கடுமையான மிரட்டல்கள் வந்தது.

அதையெல்லாம் கடந்து தொழிலாளர்கள் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் சங்கம் அமைக்கும் உரிமையும், போராடும் உரிமையும் பறிக்கப்பட்டு விடும் என்ற நிலைமை உருவாகி கொண்டிருக்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை தமிழகத்தில் உருவாக்கியவர்களில் முக்கியமானவர் சி.எஸ். சுப்பிரமணியம். அவர் ஐ.சி.எஸ். படித்தவர், 102வயதில் காலமானார்.

அவர் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தான் வாழ்ந்த வீட்டையும், 20 லட்சம் ரூபாய் நிதியையும் எழுதி வைத்து விட்டு மறைந்தார்.

அந்த இடத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தற்போது மார்க்சிய கல்விக்கான கட்டிடத்தை கட்டி வருகிறது.

இவர்கள் எல்லாம் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தர வேண்டுமென்று பாடுபட்டவர்கள். அந்த வகையில் செங்காளியப்பன், செல்லகுட்டி, கோபால் போன்ற தோழர்கள் மிகச்சிறந்த அர்ப்பணிப்பை கட்சிக்கு செய்திருக்கிறார்கள்," என்றும் முத்தரசன் கூறினார்.

இந்த கூட்டத்தில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம், "கோயம்புத்தூர் நகரம் உருவாக அடிப்படைக்காரணம் ஸ்டேன்ஸ் மில். அதன்பிறகு 1905–ல் லட்சுமி மில் துவங்கப்பட்டது. கோபால் ராதாகிருஷ்ணன் மில் தொழிலாளி. செங்காளியப்பன் லட்சுமி மில் தொழிலாளி. 1937–ல் லட்சுமி மில்லில் தொழிற்சங்கம் அமைக்க முடியாது. சங்கம் சேர்ந்தால் கடுமையான நெருக்கடிக்கு ஆளாக்கப்படுவார்கள்.

அங்கு ஜீவா போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தினார்.

கோபால் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது, பார்வதி கிருஷ்ணனும், மோகன்குமார மங்களமும் தலையிட்டு அவருக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார்கள்.

இந்த சரவணம்பட்டி ரோட்டில் கம்யூனிஸ்டுகள் நடமாட முடியாது. சில தொழிற்சங்கத்தினர் ஆலை முதலாளிகளோடு கைகோர்த்துக்கொண்டு கம்யூனிஸ்ட் தொழிலாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தார்கள். அதை உடைத்தவர்கள் செங்காளியப்பன், செல்லக்குட்டி, கோபால் இவர்கள் கடைசி வரை கம்யூனிஸ்டாக தொழிலாளி வர்க்கத்தின் பிடி மானத்தோடு வாழ்ந்து வந்தார்கள். தோழர். கோபால் தற்போதும் நம்மோடு வாழ்ந்து வருகிறார் என்றும் எம். ஆறுமுகம் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி. எஸ். சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் சி. சிவசாமி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர் இரா. கதிர்வேல்சாமி, மாமன்ற உறுப்பினர் வி. கதிர்வேல், சிவா என்ற பழனிசாமி, மாமன்ற உறுப்பினர் எஸ். பூங்கொடி, திமுக சின்னு என்ற ராஜேந்திரன், ரகுமான், மார்க்சிஸ்ட் கட்சியின் எஸ். எஸ். குலம் மேற்கு ஒன்றிய செயலாளர் எம். சண்முகம், விஸ்வராஜ், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி வடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர், வி.ஆர். பாண்டியன் நன்றி கூறினார்.

---

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

இரா.நல்லகண்ணு உள்ளிட்ட குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் மார்ச் 05 அன்று மாலை 4 மணிக்கு 15, பி, பசுவந்தனை சாலை, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள பாரதி கண்ணம்மா இல்லத்தில் இருந்து தொடங்கியது.

தோழர் எஸ்.அழகுமுத்து பாண்டியன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முறையில் தமிழ்நாடு முழுவதும் கட்சிக் கொடிகள் அரைக் கம்பத்திற்கு தாழ்த்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### இறுதி நிகழ்வில் பங்கேற்றோர்

தோழர் அழகுமுத்துபாண்டியன் இறுதி நிகழ்வில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பில் அமைச்சர் கீதா ஜீவன் மலர் வளையம் வைத்தார். மேலும் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு, விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், நக்கீரன் ஆசிரியர் கோபால், தமிழ்கடல் நெல்லை கண்ணன், தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, ம.தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் சி.இராஜேந்திரன், சிபிஎம் மாவட்டச் செயலாளர் கே.பி.ஆறுமுகம், தி.மு.க. கோவில்பட்டி நகரச் செயலாளர் கருணாநிதி, கலை இலக்கிய பெருமன்றத்தைச் சார்ந்த மருத்துவர் த.அறம், பசும்பொன் அறக்கட்டளை தலைவர் பரமசிவன், எழுத்தாளர் கோணங்கி, ஈராட்சி சுப்பையா, சோ.இராஜேந்திரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., பா.ம.க. மாவட்டச் செயலாளர் ஜி.ராமச்சந்திரன்,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன், மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநில செயற்குழு உறுப்பினர்கள் கோ.பழனிச்சாமி, டி.எம்.மூர்த்தி, ந.பெரியசாமி, பி.பத்மாவதி, க.சந்தானம், எம்.ஆறுமுகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., டி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ, த.லெனின், டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி, திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.சிவபுண்ணியம், நெல்லை மாவட்டச் செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன், திருப்பூர் மாவட்டச் செயலாளர் எம்.ரவி, துணைச் செயலாளர் கே.எம்.இசாக், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.ரவி, சேலம் மாவட்டச் செயலாளர் மோகன், கோவை மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம், துணைச் செயலாளர் சிவசாமி, பொருளாளர் யூ.கே.சுப்பிரமணியன், சிவகங்கை மாவட்டச் செயலாளர் கண்ணகி, விருதுநகர் மாவட்டச் செயலாளர் பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி., திருச்சி புறநகர் மாவட்டச் செயலாளர் த.இந்திரஜித், தேனி மாவட்டச் செயலாளர் பெருமாள், தேனி மாவட்ட நிர்வாகிகள் பெ.தங்கம், வே.பரமேஸ்வரன், இ.பி.காசி விஸ்வநாதன், வி.பாண்டி, எஸ்.திருமலை கொழுந்து, தஞ்சாவூர் வடக்கு மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி, மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் காளிதாஸ், திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் திராவிடமணி, மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ், தூத்துக்குடி மாநகரச் செயலாளர் பி.ஞானசேகர், தூத்துக்குடி மாநகராட்சி உறுப்பினர் தனலெட்சுமி, திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், வி.ச.மாவட்டச் செயலாளர் எம்.சுப்பையா, தென்காசி மாவட்டச் செயலாளர் டி.இசக்கிதுரை, மாவட்ட பொருளாளர் டி.சுப்பையா,

மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்டக்குழு ஆர்.சமுத்திரக்கனி, புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் மு.மாதவன், கிருஷ்ணகிரி மாவட்டம் எம்.இலகுமையா, மாநிலக்குழு உறுப்பினர்கள் சின்னசாமி, சுந்தரவள்ளி, பி.பழனி, சிபிஐ மாநிலக்குழு உறுப்பினர்கள் எம்.அப்பாதுரை எக்ஸ்.எம்.பி., ஒட்டப்பிடாரம் அழகு, விவசாய சங்க மாநிலப் பொதுச் செயலாளர் மாசிலாமணி, இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, முன்னாள் செயலாளர் வ.பாலமுருகன், மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் தினேஷ், மாநில துணைத் தலைவர் பா.தினேஷ், மாநிலக்குழு உறுப்பினர் விருதுநகர் வி.பாலமுருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சி.கிருஷ்ணன், தூத்துக்குடி மாவட்ட மூத்த தோழர் போத்தியடியான்,

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணை செயலாளர் நல்லையா, மாநிலக்குழு உறுப்பினர் லெனின், இரா.முத்தரசன் துணைவியார் பங்கஜம், நாகை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வழங்கறிஞர் கோ.பாண்டியன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலச் செயலாளர் எஸ்.கே.சிவா, இளைஞர் பெருமன்ற தூத்துக்குடி மாவட்ட நிர்வாகி சந்தனசேகர், மாற்றுத்திறனாளி சங்க மாநிலச் செயலாளர் முத்துக் காந்தாரி, சிபிஐ எட்டயபுரம் தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, விளாத்திக்குளம் தாலுகா செயலாளர் பிச்சையா, சிபிஐ கோவில்பட்டி தாலுகா செயலாளர் பாபு, சாத்தூர் தாலுகா செயலாளர் சுவாமிநாதன், நகரச் செயலாளர் எம்.ஜான்ராஜ், திருவேங்கடம் தாலுகா செயலாளர் அந்தோணிராஜ், ஸ்ரீவைகுண்டம் தாலுகா செயலாளர் ஏ.அம்பிகாபமி, சிபிஐ விருதுநகர் மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.முத்து, விவசாய சங்க மாவட்ட துணைத் தலைவர் கே.ஏ.சண்முகையா, சிபிஐ ஒட்டப்பிடாரம் ஒன்றிய துணைச் செயலாளர் செல்வம், வி.ச.ஒன்றியச் செயலாளர் அசோக்குமார்,

ஏஐடியூசி கட்டுமான சங்க மாநில செயலாளர் சேது, பொன்னுபாண்டியன் எக்ஸ்.எம்.எல்.ஏ., இராஜபாளையம் இரவி, சாத்தூர் சமுத்திரம், சிவங்கை மாவட்டம் பி.எல்.ராமச்சந்திரன், தென்காசி மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.குருசாமி, சிவகங்கை மாவட்ட வழக்கறிஞர் கிருஷ்ணன், கழுகுமலை பேரூராட்சி தலைவர் சுப்பிரமணி, என்.சி.பி.எச். கிருஷ்ணமூர்த்தி,

மதுரை மாவட்ட மாதர் சம்மேளன ராஜலெட்சுமி, தெரு ஆட்டோ சங்கம் தெட்சிணாமூர்த்தி, பசுந்தளை ரோடு ஆட்டோ ஓட்டுநர் சங்கம் ராமச்சந்திரன், ஏஐடியூசி தங்க நகை தொழிலாளர் சங்கம் ஜி.அலாவுதீன், சாலையோர சங்க வியாபாரிகள் சங்க செயலாளர் ஜோசப், ஏஐடியூசி செயலாளர் என்.குருசாமி, டி.ஒய்.எப்.ஐ. மாவட்டச் செயலாளர் சுரேஷ், மாவட்டத் தலைவர் மணிகண்டன், ஏஐடியூசி கிருஷ்ணன் கோவில் சங்கம் கருப்பசாமி, கண்ணன், கோவில்பட்டி செயலாளர் செல்லக்குட்டி,

கோவில்பட்டி நகர ஜாமியா பள்ளிவாசல் ஜமாத் தலைவர் ஹிமாயூன், மதுரை மாவட்ட பஞ்சாலை சங்க பெருமாள், ஜி.ராமகிருஷ்ணன், அமமுக தென் மண்டலப் பொறுப்பாளர் எஸ்.வி.எஸ்.பி.மாணிக்கராஜ், கோவில்பட்டி வி.ஜெய்சங்கர், வி.பிஜயபாஸ்கரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தோழர் அழகுமுத்துபாண்டியன் மகள் கண்ணம்மா சிதைக்கு தீ மூட்டினார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 01

# சொத்துடைமைக்கு மட்டுமே நித்திய காலப் பூசை

“கொரோனா ஊரடங்கு காரணமாக நாடு இன்னல்களை சந்தித்தது. நாடு முழுவதும் யாரும் வெளி வரமுடியாத சூழ்நிலை இருந்தது. இந்தக் காலகட்டத்தில் மக்கள் பணம் சம்பாதிக்கவும் வெளியே செல்ல முடியாத நிலை. இதுபோன்ற நேரத்தில் “அரசுதான் மக்களைக் காப்பாற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க நீதிமன்றத்திற்கு உரிமை உள்ளது” என சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் இரண்டு நீதிபதிகள் அமர்வு கூறியிருக்கிறது. நல்ல கருத்து. மனதார வரவேற்போம்.

நாகர்கோவில் மாநகராட்சி தனக்குச் சொந்தமான கடைகளுக்கு 2020 ஏப்ரல், மே இரண்டு மாதங்களுக்கு வாடகை விலக்களித்தது. இது போதாது என கடைகளை நடத்தும் வாடகைதாரர்கள் உயர்நீதிமன்றம் சென்றனர். மார்ச் முதல் செப்டம்பர் மாதம் வரை 6 மாத காலத்திற்கு வாடகை கேட்கக் கூடாது என்ற தனி நீதிபதி உத்தரவிட்டார். இதை எதிர்த்து மாநகராட்சி மேல்முறையீடு செய்ய, விசாரித்த இரண்டு நீதிபதிகள் தான் மேற்சொன்னவாறு கூறி தனி நீதிபதி தீர்ப்பை உறுதிப்படுத்தினர்.

பொது முடக்கத்தை அறிவித்த போதே ஒன்றிய அரசு, மூடிய காலத்துக்கு தொழிலாளர்களுக்கு முழு சம்பளம் வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. இதனை எதிர்த்து முதலாளிகள் உச்ச நீதிமன்றம் சென்றனர். உடனேயே ஒன்றிய அரசு தனது உத்தர வைத் திரும்பப் பெற்றது!

விசாரித்த உச்சநீதிமன்றம், முதலாளிகள் 50 நாட்களுக்கு ஏதாவது சம்பளம் கொடுக்க முடிந்தால், அது எவ்வளவு என தொழிலாளர்களோடு பேசி கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். எந்தத் தனியார் முதலாளி மீதும் சம்பளம் கொடுக்கவில்லை என்று ஒன்றிய அரசு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க கூடாது என்று தெளிவாக உத்தரவிட்டது. மதுரை கிளை கேட்டதைப் போல, வருவாய் இழந்த பல கோடி தொழிலாளர்களைக் காப்பாற்றும் கடமை நிறைவேற்றப்படவில்லை!

சாதாரண மக்கள் மனு தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுக்கவே ஐந்தாறு ஆண்டுகள், தீர்ப்பு வர இருபது முப்பது ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் முதலாளிகள் தாக்கல் செய்தால் சில வாரங்களில் தீர்ப்பே வந்துவிடுகிறது!

இந்திய மக்கள் மீது ஆதார் அட்டையை திணிக்கக்கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் வீட்டுக்குள் இருந்தாலும் சாலையில் கால் வைத்தாலும் ஆதார் அட்டை இல்லாமல் அணுவும் அசையாது என்ற நிலையை அரசுகள் உருவாக்கி விட்டன. உச்சநீதிமன்ற உத்தரவு சுக்குநூறாய் கிழிக்கப்பட்டிருந்தாலும், நீதிமன்றம் கண்டும் காணாமல் போய்விடுகிறது!

அண்மையில் தமிழ்நாடு மின்சாரவாரிய ஒப்பந்த ஊழியர்கள், நிரந்தரத் தகுதியை உறுதிப்படுத்தும் சட்டத்தின்கீழ் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கோரி தாக்கல் செய்த மனுவை தொழிலாளர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. ஒப்பந்த ஊழியர்கள் எல்லோரும் பின்வாசல் வழி வந்தவர்களாம். அவர்களை நிரந்தரப் படுத்தினால் வேலையின்றி காத்துக்கிடக்கும் இந்திய இளைஞர்களின் வாய்ப்பைப் பறித்ததாக அர்த்தமாம். இதை உச்ச நீதிமன்றமே சொல்லிவிட்டதாம். எனவே ஒப்பந்த ஊழியர்கள் நிரந்தரம் கோரமுடியாதாம்.

ஒப்பந்த ஊழியர்களே பின் வாசலை திறந்துகொண்டு திருட்டுத் தனமாக நுழைந்தார்களா என்ன? திறந்து விட்ட அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை? ஒப்பந்த ஊழியர்களும் இந்திய இளைஞர்கள் தானே! ஒப்பந்த முறையே கூடாது என உத்தரவிட்டு பின் வாசலையே அடைத்து விடலாமே! அவ்வாறு எந்த நீதிமன்றமும் தீர்ப்பு தருதில்லை.

சமவேலைக்கு சமமான ஊதியம் என எத்தனை தீர்ப்புகள் வந்துவிட்டன. எதுவும் அமலாகவில்லை.

“ஊழல் வேர் வரை பரவி கரையான் போல சமுதாயத்தை செல்லரித்துள்ளது. ஊழல் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தவறுவோருக்கு பதவி உயர்வு வழங்க கூடாது” என சென்னை உயர்நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு கூறியிருக்கிறது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஊழல் பற்றி பிரசாந்த் பூஷன் ட்விட்ரில் பதிவிட்டதை தானே வழக்காக்கியது உச்சநீதிமன்றம். மூன்று நீதிபதிகள் அமர்வு முன்பு விசாரணை நடந்தது. அரசு தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபால் உயர்மட்ட ஊழல் குறித்து, உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகள் 9 பேர் சொல்லியிருப்பதாக விளக்கினார். நீதிபதிகள் இடைமறித்து தடுத்து விட்டனர். கடைசியில் பூஷன் மன்னிப்பு கேட்கவேண்டும் எனக் கேட்டு, அவர் மறுக்கவே, ஒரு ரூபாய் அபராதம் விதித்து நீதிமன்றத்தைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

ஜனநாயகம் பேசினாலும் முதலாளித்துவ சமூகத்தில், நோய் நாடி, நோய் முதல் நாட நீதிமன்றங்களால் முடியும். நோய் தணிக்கும் வாய் நாடுவதற்குத்தான் வாய்ப்பில்லை.

---

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India

டாக்டர் சோம மார்லோ
(மார்ச். 13 - 19)

# விரைவில் புவிக்கோளம் வாழத் தகுதியற்றதாகும்...

## பருவநிலை அறிக்கை எச்சரிக்கை



**“67 நாடுகளைச் சேர்ந்த 270 விஞ்ஞானிகள் ஐநா மன்றத்தில் ஐ.பி.சி.சி.-ன் அறிக்கையைச் சமர்ப் பித்தது; அதில் நமது பருவநிலை எப்படி மாற்றமடைகிறது, அதன் தாக்கம் மற்றும் இன்றைய அதன் தீர்வு தொகுத்துச் சொல்லப்பட்டது.**

ஐநாவில் அறிக்கையை அறிமுகம் செய்த ஐநா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் கூறினார்: “நமது மக்களும் புவிக்கோளும் பருவநிலை மாற்றத்தால் தாக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ பாதி மனிதகுலம் அபாயப்பகுதியில் இப்போது வாழ்ந்து வருகிறது. பல வகை சூழலியல் அமைப்புகள் இன்று திரும்ப வரமுடியாத நிலையில் உள்ளன. உண்மைகள் மறுக்க இயலாதபடி உள்ளன. ஆட்சித் தலைமைகள் தங்கள் கடமைப் பொறுப் பைத் துறப்பது கிரிமினல் குற்றம். உலகை மிகப் பெரிதும் மாசுபடுத்துபவர்கள் நமது ஒரே சொந்த வீட்டிற்குத் தீ வைக்கும் குற்றம் இழைப்பவர்கள்” எனக் விமர்சித்து அறிக்கையில் விளக்கினார்.

புகழ்பெற்ற சூழலியல் ஆய்வாளர்களில் ஒருவர், “பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பைச் சரிசெய்ய உலகிற்கு ஒரு சிறு திறப்பே இருப்பதை மிறிசிசி அறிக்கை தெளிவுபடுத்தி உள்ளது; மேலும் மேலும் மோசமடையும் பாதிப்பில், அதற்கு எந்தவகையிலும் காரணமாகாத, உலகின் ஏழைகளே அதிகம் பாதிக்கப்பட்டு பலியாக உள்ளனர் என்பதையும் அறிக்கை அங்கீகரித்துள்ளது” எனக் கூறினார்.

புவி வெப்பமடைதல் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாகவும் பாதிக்கப்படும் சூழலியலால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு, வறட்சி ஏற்படுகிறது. பல தாவர இனங்கள், பறவைகள், விலங்குகள் நிரந்தரமாக மறைந்து உயிரி பன்மயம் சுருங்குகிறது. “பருவநிலை மாற்றம், குறிப்பிடத்தக்க அழிவுகள், திரும்ப முடியாத இழப்புகள் அதிகரிப்பு, மண்ணில், நன்னீரில் மற்றும் கடலில் வாழும் உயிரினங்களையும் அது சார்ந்த சூழலியல்களையும் பெரிதும் பாதிப்படையச் செய்கிறது” என அறிக்கை விளக்குகிறது.

இந்தப் பேரழிவுகளையும் திரும்ப முடியாத தாக்கங்களையும் கட்டுப்படுத்த ஒரே தீர்வு, வெப்ப உயர்வைத் தடுப்பது அதுவே அவசரத் தேவை. ஒவ்வொரு அரை டிகிரி வெப்ப உயர்வும் ஒவ்வொரு ஆண்டும் அக்கறைப்பட வேண்டிய விஷயமாகும். வெப்பமடைதலை 1.5 டிகிரியாகக் கட்டுப்படுத்த இன்னும் வாய்ப்பு உள்ளது, ஆனால் அந்த வாயில் விரைவாக மூடப்பட்டு வருகிறது. அந்நிலையை எட்ட அடுத்த எட்டாண்டுகளில் உலகளாவிய வாயு உமிழ்வை 45 சதவீதம் குறைக்க வேண்டும். இருப்பினும் கடந்த ஆண்டு கிளாஸ்கோவில் நடந்த கான்பிரஸ் ஆப் பார்ட்டிஸ் 26வது (**COP26**) மாநாடு எனப்படும் ஐநா பருவநிலை மாநாட்டில் உலகின் சமகாலத்துத் தேசிய அரசுகள் ஒப்புக்கொண்ட அளவை நிறைவேற்றினால் அதே கால அளவில் வெளியிட்ட வாயுக்களின் அளவைவிட அது 14% அதிகமானதாகவே இருக்கும்.

**நமது ஒன்றிய அரசு என்ன செய்கிறது?**

சர்வதேச மாநாடுகளில் பசுமை எரிசக்தி உற்பத்தி குறித்த உறுதி மொழிகள் குறித்து வீரதீரமாக உரத்து வாய் ஜாலம் காட்டியதற்கு மாறாக நேர் எதிராகச் செயல்படுகிறது. சென்ற ஆண்டு தொழிற்சாலை முதலாளிகள் பயன்பெறும் வகையில் சூழலியல் சட்டங்களை மிகக் கடுமையாக நீர்த்துப்போகச் செய்தது; அதன் மூலம் எளிதில் சூழலியல் பாதிப்படையக்கூடிய இமயமலை மற்றும் அந்தமான் தீவுகளில் தொழிற்சாலைகள் மற்றும் சுரங்க அதிபர்கள் கட்டுப்படுத்தப்படாத வரைமுறையற்ற செயல்பாடுகளை மேற்கொள்ள அனுமதித்தது. சமீபத்தில் முன்மொழிந்த உயிரி பன்மயச் சட்டம் 2002 இந்தியாவின் தேசியப் பூங்காக்கள் மற்றும் பாதுகாப்புக் காடுகளின் அரிய மருத்துவ மூலிகைகள், உள்நாட்டு பாரம்பரிய வகை பயிரி னங்களைச் சுதந்திரமாகச் சுரண்டுவதற்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மருந்து நிறுவன ஆலைகளுக்கு வசதி செய்து தந்துள்ளது. 2022 – 23ம் ஆண் டிற்கான ஒன்றிய நிதிநிலை அறிக்கை, இந்த விஷ யத்தில் மிகப் பெரிய ஏமாற்றம்.

சட்டப் படியான அமைப்பான ‘காற்று தர மேலாண்மைக்கான ஆணைய’த்திற்குப் பட்ஜெட் ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. சில சூழலியல் அமைப்புகள் மற்றும் ஒழுங்குபடுத்தும் போர்டுகளுக்கான நிதியும் சுருங்கியுள்ளது. இந்த நிதி குறைப்பு நடவடிக்கைகள், தூய்மையான ஆற்றல் உற்பத்தி மற்றும் பருவநிலை நடவடிக்கை குறித்து இந்திய அரசு சர்வதேச அரங்குகளில் வழங்கிய உறுதிமொழி பற்றிய நம்பகத் தன்மை மீது நமக்குச் சந்தேகத்தை எழுப்புகிறது. பருவநிலை மாற்ற அபாயத்தைக் குறைப்பது குறித்த ஒட்டுமொத்த அவசர உணர்வு இல்லாதவரை நாம் எதிர்காலத்தை எதிர்கொள்வதற்குத் தயாராக மாட்டோம்.

**பருவநிலை ஆபத்துக்கு எதிரான நடவடிக்கையைப் புறக்கணிப்பது தலைக்கு மேல் தொங்கும் கத்தி!**

**முதலாளித்துவத்தில் தண்ணீர், வனங்கள், வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் மற்றும் இயற்கையின் அனைத்து வஸ்துகளும் கொள்ளை லாபத்திற்கான விற்பனை பண்டங்களாக மாற்றப்படுகிறது. இயற்கை செல்வாதாரங்கள் அனைத்தையும் முதலாளித்துவ முறை கொள்ளையடித்து, பெருமளவிலான உற்பத்தியில் பயன்படுத்தி, சுற்றுச் சூழல் சார்ந்த சூழலியல் முறைமையை மீளமுடியாதபடி சேதப்படுத்துகிறது. கொள்ளை லாபப் பெரும் பசியில் நடைபெறும் முதலாளித்துவ உற்பத்தி முறையை மாற்ற வேண்டும்; நீடித்து நிலைத்திருக்கும் இயற்கைக்குச் சாதகமான நட்பு முறை உற்பத்தி முறை யாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்; பொறுப்பும் சக குடிமக்களுக்கு சமத்துவத்தை அளிக்கும் ஜனநாயக முறை யில் நிர்வகிக்கப்படும் உற்பத்தி முறைக்கு மாற வேண்டும்; அது சோஷலிச ஆட்சி முறையின் கீழ் மட்டுமே சாத்தியம்.**

சர்வதேச உழைக்கும் வர்க்கம், பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஒன்றிணைந்து லாபத்திற்காக அல்லாமல், சோஷலிசத்திற்காக, அடிப்படையில் சமூகம் மனிதத் தேவையை அங்கீகரித்துப் போராட வேண்டிய அவசரத்தை, அறிக்கை எச்சரிக்கைகள், அதிகரிக்கின்றன.

பூவுலகைக் காக்கும் போராட்டமும், புதியதோர் உலகம் செய்வதற்கான போராட்டமும் வேறு வேறு அல்ல!


தமிழில்: **நீலகண்டன்**

தத்துவார்த்தம் 24



எஸ். தோதாத்ரி

# தமிழகத்தில் மார்க்சியப் போக்குகள்



**மார்க்சியம் தோன்றிய காலத்தில் இருந்தே அதுபற்றிய விவாதங்கள் அதிகமாக இடம் பெற்று வந்துள்ளன. மார்க்சியம் பற்றிய விமர்சனங்களுக்கு மார்க்சும், ஏங்கல்சும் பல கடிதங்கள் மூலமாகவும் அவர்களது பல நூல்களிலும் மறுப்புத் தெரிவித்து வந்துள்ளனர். மார்க்ஸ் ஏங்கல்ஸ் மறைவிற்குப் பின்னர் மார்க்சியம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முயற்சியைப் பலர் மேற்கொண்டனர். அதே சமயம் அதனை விரிவாக்கப் பலர் முயற்சியை மேற்கொண்டனர். பல பெயர்களை இங்கு சுட்டிக்காட்டலாம். பெலின்ஸ்கி, பிளக்கனாவ், லெனின், மாசேதுங் போன்றவர்கள் ஒரு புறம் லூகாக்ஸ், கிராம்சி, அல்துசர், மார்க்யூஸ் போன்றவர்கள் மற்றொரு புறம் மார்க்சியத்திற்கு விளக்கங்கள் அளித்தனர்.**

இவ்விளக்கங்களில் இருவேறு போக்குகளை அடிப்படையாகக் காணலாம். முதலாவது மனித நேயப்போக்கு; இரண்டாவது விஞ் ஞானப் போக்கு. இவற்றின் எல்லா அம்சங்களையும் வெளி நாட்டு அரங்கில் செவ்வியல் மார்க்சியம் என்றும், மேலைய மார்க்சியம் என்றும் அழைப்பர். இவை அனைத்தையும் தமிழகத்தில் தரமுடியா விட்டாலும், இங்கு உள்ள சூழ்நிலைக்கு ஏற்றபடி இடம் பெற்றுள்ள சில கூறுகளை இங்குக் காணமுடியும்.

முதலில் நாம் இங்குக் கவனிக்க வேண்டியது மார்க்சியம் பரவிய முறை ஆகும். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் மார்க்சியம் பற்றிய தகவல்கள் தமிழகத்தில் பரவத் துவங்கின. உலகளாவிய முறையில் ஐரோப்பாவில் இடம் பெற்ற மாறுதல்கள் இந்தியாவையும் பாதித்தன. இதில் மிக முக்கியமானது தேச விடுதலைப் போராட்டம் ஆகும். இப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் வெள்ளையர்களை எதிர்ப்பதற்குப் பல மாற்றுச் சித்தாந்தங்களைத் தேடினர். அதில் ஒன்று மார்க்சியம்.

காங்கிரஸ் இயக்கத்தின் தீவிரவாத காலக்கட்டத்தில் மார்க் சியம் பற்றிய விவாதம் காங்கிரசுக்குள்ளேயே இடம் பெற்றது. இது ஒரு இடதுசாரி அணியை உருவாக்கியதற்குப் பின்புலமாக இருந்தது. தமிழகத்தில் உருவான சுயமரியாதை இயக்கம் அதன் துவக்க காலத்தில் மார்க்சியம் பரப்புவதற்கு முன் முயற்சியை மேற்கொண்டது. ‘‘கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை’’ பெரியார் வெளியிட்டார். சுயமரியாதை இயக்கத்தினர் மார்க்சியத்தை அவர்கள் நோக்கில் பேசி வந்தனர். பொதுவுடைமை இயக்கம் மார்க்சியத்தைப் பரப்புவதற்கு முழுமுயற்சியை மேற்கொண்டது எம்.பி.டி. ஆச்சார்யா, எம். என்.ராய், முசாபர் அகமது, சிங்கார வேலர் போன்றவர்கள் இதுபற்றி பேசியும் எழுதியும் வந்தனர். சிங்காரவேலரின் கட்டுரைகள் மார்க்சியத்தைப் புரிந்து கொள் வதற்குப் பெரிதும் உதவின. திரு.வி.க போன்றவர்களும் இதுபற்றி எழுதினர். மார்க்சியம் பற்றிய விவாதங்கள் அதிகம் இடம் பெறலா யின.

இந்தக் காலகட்டத்தில் மார்க்சியம் பற்றி அறிந்து கொள்வதற்கு எம்.என் ராயின் நூல்கள், ரஜனி பாமேதத் எழுதிய ‘‘இந்தியா நேற்றும், இன்றும், நாளையும்‘‘ ஆகியனவும், ‘‘கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை’’ போன்ற நூல்கள் பெரிதும் உதவின.

பொதுவுடைமை இயக்கம் வளர்த்தெடுத்த மார்க்சியம், அதன் கட்சி சார்ந்த மார்க்சியவாதிகள் மூலம் போதிக்கப்பட்டது. துவக்கக் காலத்தில் கட்சியைக் கட்டி வளர்த்தவர்களே மார்க்சிய போதனையையும் மேற்கொண்டனர். இவர்களுக்குக் கிடைத்த நூல்கள் சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளைச் சார்ந் தவை. ஓரளவிற்கு இங்கிலாந்திலிருந்து கிடைத்த நூல்களும் இவர்களுக்கு உதவின. இவற்றின் துணைகொண்டு கட்சி உறுப்பினர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. அந்த வகுப்புகளின் பாடத் திட்டம் என்பது மார்க்சியம் அடிப்படைகள் என்பது ஒரு பகுதியாகவும், இந்தியச் சூழல் என்பது மற்றொரு பகுதியாகவும் பிரிந்து இருந்தது. காலப் போக்கில் சீனப்பாதை, டிராட்ஸ்கியப் பாதை, சோவியத் பாதை என்பதெல்லாம் இடம் பெற்றன. ஆனால் இந்தப் பாதைகள் யாவும் நடைமுறைத் தந்திரம் பற்றியதே அன்றி அடிப்படை பற்றியது அல்ல.

இங்கு நாம் ஒரு விஷயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கு மார்க்சியத்தைப் பரப்பியவர்கள் அதன் செவ்வியல் வடிவத்திலே அதனைப் போதித்தனர். இதனை ஒட்டுமொத்தமாக சோவியத் மார்க்சியம் என்று அழைத்துவிடக்கூடாது. அல்லது திரிபுவாதம் என்று அழைத்துவிடக்கூடாது. ஏனென்றால், இந்த வழி மார்க்சியத்தில் பெலின்ஸ்கி, பிளக்கனாவ், லெனின், டிராட்ஸ்கி ஆகியோரது விளக்கங்கள் அடங்கும். இவர்கள் மார்க்சியத்தை கறாராகக் கடைப்பிடித்தனர். அதாவது மார்க்சியத்தை அதன் விஞ் ஞானத் தன்மையுடன் போதிப்பதாகும். இது மார்க்சியக் கோட்பாடு சம்பந்தமானது. இதனையும் நடைமுறைத் தந்திரத்தையும் குழப்பிக்கொள்ளக்கூடாது.

இந்த முறையில் இங்கு மார்க்சிய அறிவைப் பரப்பும் முயற்சி நடைபெற்றது. இவர்கள் மார்க்சியத் தத்துவத்தில் இயங்கியல் பொருள் முதல்வாதத்தை ஏற்றுக் கொண்டார்கள் வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தை ஏற்றுக்கொண்டார்கள் மார்சியத்தின் முக்கிய அம்சமான அடிப்படை மேற்கோப்பு என்பதனை மார்ச்சிய ரீதியிலேயே ஏற்றுக்கொண்டனர். அதாவது அடிப்படை மாறிக்கொண்டே இருக்கிறது. அது மாறும்பொழுது மேற்கோப்பு மாறுகிறது அடிப்படைதான் தீர்மானிக்கும் சக்தி உள்ளது. அடிப்படைக்கும் மேற்கோப்பிற்கும் உள்ள உறவு தார தம்ய உறவு என்று இவர்கள் கூறினார்கள். ஒரு உதாரணமாகத் தமிழில் மார்க்சிய போதனையை ஒரு ஒழுங்கிற்குக் கொண்டுவந்த பேரா. நா வானமாமலையின் நூல்கள் இந்த முறையில் அமைந்திருந்தன. இரண்டாவதாக வர்க்கப் போராட்டம் வரலாற்று இயக்கத்திற்குக் காரணம் என்று இவர்கள் கூறினர். மூன்றாவது இயங்கியலின் விதிகள் அனைத்தையும் இவர்கள் ஏற்றுக்கொண்டனர். நான்காவது பிரதி பலித்தல் கோட்பாட்டினை இவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதன் அடிப்படையில் சமூகப் பிரச்சினைகளையும் அழகியல் பிரச்சினையும் விளக்கினர்.

**பேரா. நா வானமாமலையின் ‘மார்க்சிய அழகியல்’ என்ற நூல் பிரதிபலித்தல் கோட்பாட்டின் அடிப்படையில் எழுதப்பட்டது ஆகும். ஐந்தாவது இவர்கள் மார்க்சியத்தினை வலுவான மையம்கொண்ட தத்துவமாக அணுகினர். ஆறாவது, இவர்கள் ஒரு அமைப்பிற்கு உட்பட்டு மார்க்சியத்தை அணுகினர் இவர்களது பெரும் முயற்சியால் தமிழகத்தில் உருவானதுதான் மார்க்சிய முறை இயல் என்பது.**

இந்த முறை இயலைப் பயன்படுத்தித்தான் தமிழக வரலாறு, கலை, இலக்கியம் ஆகியன பற்றிய வலுவான ஆய்வுகள் உருவாயின. கலாநிதி கைலாசபதி, கலாநிதி. சு. சிவத்தம்பி, பேரா. நா.வானமாமலை, அதன் பின்னர் நெல்லை ஆய்வுக் குழு உறுப்பினர்கள் என்று ஒரு பெரிய பட்டியலே இதில் அடங்கியுள்ளது. இதன் காரணமாக மார்க்சிய முறை இயல் என்பது பல்கலைக் கழக அளவிற்கு உயர்ந்தது எனலாம். இது பலர் மார்க்சியத்தைக் கற்பதற்குப் பின்புலமாகவும் அமைந்தது. இதன் விளைவாக மார்க்சியத்தைப் பரப்புவதில் பல போக்குகள் உருவாயின.

புதிய போக்குகளை உருவாக்கியவர்களை பொதுவாக புதிய இடதுசாரிகள் என்று அழைக்கலாம். இவர்களில் எஸ்.என்.நாகராஜன், ஞானி, அ.மார்க்ஸ், ஆம்பூர் கோ.கேசவன் எஸ். வி.இராஜதுரை, குணா, தமிழவன் என்ற பெரிய பட்டியலே இதில் அடங்கும். இன்று பெண்ணியம், தலித்தியம் பேசுபவர்களும் மார்க்சியத்தின் சில பகுதிகளைத் தன் வயப்படுத்திக் கொண் டுள்ளனர். இவர்கள் தமிழகத்தில் பரப்ப முயற்சி செய்யும் மார்க்சியம் ஐரோப்பிய கம்யூனிசம். மேலைய மார்க்சியம், புதிய மார்க்சியம் என்ற பல பெயர்களால் அறிமுகமானவை ஆகும். இவர்களைப்பற்றிக் காண்பதற்கு முன்னால் இங்கு ஒரு விஷயத்தைக் காண வேண்டும். மார்க்சியக்கோட்பாட்டு வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட சில நிலைகள் தாம் அவை. மார்க்சின் அடிப்படைக் கொள்கைகளை விளக்குவதற்குத் தோன்றிய போக்குகளை திரிபுவாதம் **(Mevisionism)** என்றும். திருத்தல்வாதம் **(Reformism)** என்றும் குறிப்பிடுவர். இதனை ரஜனிபாமேதத் அவருடைய நூல்களில் சுட்டிக் காட்டியுள்ளார் இதில் திரிபுவாதம் என்பது பாட்டாளி வர்க்க முகாம்களிலேயே தோன்றுகிறது. திருத்தல்வாதம் என்பது மார்க்சியத்திற்கு பல எதிர் முகாமிலிருந்து தோன்றுகிறது. திரிபுவாதிகள் மார்க்சியத்தின் சில பகுதிகளை மாற்றி விளக்கம் அளித்தனர்.

திருத்தல்வாதிகள் அதன் அடிப்படைகளையே மாற்றி அதனை தாக்குவதில் ஈடுபட்டனர். 1890களுக்கு முன்னர் உழைக்கும் வர்க்கத்தின் இயக்கத்தில் மார்க்சியம் வெற்றிகரமான சித்தாந்தமாக விளங்கியது. இந்திய உலகாயுதம் எவ்வாறு அதன் பிறப்பிலிருந்தே தத்துவங்களுடன் போராட வேண்டி யிருந்ததோ அதே போன்று மார்க்சியம் பல கருத்தமைப்புகளுடன் போராட வேண்டி யிருந்தது.

இந்தப் போராட்ட காலகட்டத்தில் பல முரண்பட்ட கருத்துக்கள் மார்க்சியத்திற்குள் நுழைந்தன. இதில் முக்கியமானவை திரிபுவாதமும் திருத்தவாதமும் ஆகும். இவற்றைப் பற்றி லெனின் ‘‘மார்க்சியமும் திரிபுவாதமும்‘‘ என்ற கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். பிரன்ஸ்டின் என்பவரது கருத் துக்களை வன்மையாக லெனின் அதில் கண்டித் துள்ளார்.

ஆனால் லெனின் கால கட்டத்திற்குப் பின்னர் ஸ்டாலினிசம் வலுவாக உருவாயிற்று. இதற்கு எதிராகப் பல ஐரோப்பிய நாடுகளில் இடதுசாரி முகாமிலும் அதற்கு வெளியேயும் விவாதங்கள் தோன்றின. இதன் விளைவாக மேலைய நாடுகளின் அரங்கில் புதிய இடது சாரிகளின் இயக்கம் உருவாயிற்று. இதில் பல நாட்டு அறிஞர்கள் இடம் பெற்றனர். ஜெர்மனியில் இருந்து உருவான பிராங்கபர்ட் இயக்கம், இத்தாலிய கம்யூனிசம், பிரஞ்சு கம்யூனிசம், ஆஸ்திரிய கம்யூனிசம் என்று பல பிரிவுகள் இருந்தன. இவற்றை ஐரோப்பிய கம்யூனிசம் என்றும் அழைத்தனர்.

இந்த இயக்கம் பல்வேறு கிளைகளைக் கொண்டதாக இருந்தாலும், இ.பாட்லாவ் **(The Philosophy of Revoll)** என்பவர் கூறுவது போல சில பொதுவான போக்குகள் இவற்றிற்கு இடையே இருந்தன. இவற்றில் காணப்படும் திருத்தல்வாதம் என்பது பின்வரும் போக்குகளைப் பெற்றிருந்தன. பல பூர்ஷ்வா சமூகவியலாளர்களின் கொள்கைகளை, குறிப்பாக பிராய்டிசத்தையும் இருத்தலியத்தையும், மார்க்சியத்துடன் கலத்தல், மார்க்சின் போதனைகளைப் பகுதிபகுதியாகப் பிரித்தல், பொருளாதாரவாதம் **(Economism)** மனிதநேயம் **(humanism)** என்று பாகுபாடு செய்தல், மார்க்சிய அடிப்படைகள் காலத்திற்கு ஏற்றபடி மாற்ற வேண்டும் என்று கூறி அவற்றை நிராகரித்தல், மார்க்சுக்கும், ஏங்கல்ஸ்க்கும் வேறுபாடு காணுதல், லெனினிற்கும் மார்க்சுக்கும் வேறுபாடு காணுதல், மார்சீயத்தை வெறும் விமர்சன ஆயுதமாக **(critical weapon)** காணுதல், இயங்கியலை மறுத்தல், அதன் நோக்கம் எல்லாவற்றையும் மறுத்தல், **(Negative dialectics)** என்பது ஆகும்.

தொடர்ச்சி அடுத்த வாரம்....

தொடர்புக்கு: 98947 83657



எம்.ஆறுமுகம்,
எக்ஸ்.எம்.எல்.ஏ.,



# ஜவுளித் தொழிலையும், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**பருத்தியை ஆதாரமாகக்கொண்டு இயங்கும் ஜவுளி தொழிலைச் சார்ந்தவர்கள் மத்திய அரசுக்கு சில கோரிக்கைகள் முன்வைத்துள்ளனர்.**

மத்திய அரசு பஞ்சு இறக்குமதிக்கான 11 சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில்தான் 931 ஸ்பின்னிங் மில், 48 காம்போசிட், 19 வீவிங் மில்கள் என மொத்தம் 998 ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. சிறிய நூற்பாலைகள் (ஸ்பின்னிங் மில் 1029) தமிழகத்தில் தேவையான மூலப்பொருளான பருத்தி, ஆண்டுக்கு 120 லட்சம் பேல்கள் தேவை. (ஒரு பேல் என்பது 170 கிலோ). தமிழகத்தில் உற்பத்தியாகும் பஞ்சு ஒரு ஆண்டுக்கு 6 லட்சம் பேல்கள் மட்டுமே. 114 லட்சம் பற்றாக்குறையாக உள்ளன.

தமிழகத்தில் இயங்கி வரும் பஞ்சாலைகளுக்கு தேவையான பற்றாக்குறையான 114 லட்சம் பேல்கள், வடமாநிலங்களில் இருந்து கொண்டு வரவேண்டும் அல்லது வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். இந்திய நாட்டின் ஒட்டுமொத்த நூல் உற்பத்தியில், தமிழகத்தில் தான் 45% உற்பத்தி செய்யப்படுகிறது. இந்திய காட்டன் கார்ப்பரேஷன் (**CCI**) பருவகாலத்தில் முறையாக கொள்முதல் செய்து, நியாயமான விலைக்கு ஆலைகளுக்கு விற்பனை செய்யலாம். ஆனால் காட்டன் கார்ப்பரேஷன் முழுமையில் பருத்தியை கொள்முதல் செய்வதில்லை. இதனால் இடைத்தரகர்கள், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து, குடோன்களில் பதுக்கி வைத்துக் கொண்டு, செயற்கையான முறையில் பற்றாக்குறையை உருவாக்கி, கூடுதலான விலைக்கு பருத்தியை விற்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், ‘ஆன்லைன்’ பஞ்சு வர்த்தகத்தை, இந்திய அரசு ஊக்குவிப்பாலும் ஆன்லைன் மூலம் கொள்முதல் செய்பவர்கள், மிகப்பெரிய குடோன்களில் பதுக்கி வைப்பதால், விலை ஏற்றத்துக்கு இதுவும் முக்கியமான காரணமாக அமைகிறது.

இந்திய நாட்டில் உள்ள பஞ்சாலைகளுக்கே, பற்றாக்குறை இருக்கும் போது, அன்னிய செலாவணிக்காக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து பற்றாக்குறையை இந்திய அரசே உருவாக்குகிறது.

விவசாயத்திற்கு அடுத்த நிலையில் ஜவுளி தொழில் விளங்கி வருகிறது. பஞ்சாலை, கைத்தறி, விசைத்தறி, நெசவு தொழில், சாய ஆலைகள், ஆயத்த ஆடை தொழில்கள் பருத்தியை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகின்றன. இத்தொழிலில் சுமார் 20 கோடி பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள்.

கடந்த 18 மாதங்களில் பின்னலாடை நிறுவனங்கள், நூல் விலை ஏற்றத்தின் காரணமாக, நூல் விலை கிலோவுக்கு 200/ உயர்ந்துள்ளது. இதனால் இத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள, திருப்பூர் பின்னலாடை தொழில் துறையினர் மத்திய ஜவுளித்துறை அமைச்சரை சந்திக்க முடிவு எடுத்துள்ளனர். அதேபோல் ஜாப் ஒர்க் நிறுவனங்கள், பிரிண்ட்டிங், எம்பிராய்டரி, டையிங், சாய ஆலைகள் உள்ளிட்டவை ஜவுளித் தொழிலை விட்டு வெளியேறும் அபாய நிலை உருவாகியுள்ளது. ஸ்பின்னிங் மில்களுக்குத் தேவையான

**‘கோன்’ உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள், 30 சதவீதம் உற்பத்தி குறைக்கவும், அதனால் 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயத் தையும் உருவாக்கியுள்ளனர். இதற்கு அடிப்படையான காரணம் கோன் உற்பத்தி செய்யும் பேப்பர் விலை பல மடங்கு உயர்ந்த காரணத்தால் எங்களால் தொழில் செய்ய இயலாது என்று சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.**

வரலாறு காணாத பஞ்சு விலை உயர்வால் ஆலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, சிஸ்பா அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது. இதற்கு அவர்கள் கூறும் காரணம் 2020ம் ஆண்டு பருவகாலத்தில் பஞ்சின் சராசரி விலை கண்டிக்கு (ஒரு கண்டிக்கு 355 கிலோ) ரூபாய் 37,000/– விற்ற பஞ்சு 2021 அக்டோபர் மாதத்தில், ரூபாய் 60,000/– எனவும், தற்போது ஒரு கண்டி பஞ்சு ரூபாய் 97,000/– எனவும் உயர்ந்துள்ளது. இரண்டு ஆண்டுகளில் 2.6 மடங்கு பஞ்சு விலை உயர்ந்துள்ளதாகவும், எங்களால் தொடர்ந்து ஆலைகளை இயக்க முடியாது, மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

இச்சூழ்நிலையில் கடந்த 21 ஆண்டுகளுக்கு மேலாக, பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, எந்தவிதமான ஊதிய உயர்வும் இல்லாமல், வாழ்க்கைத்தரம் மோசமான நிலைக்கு சென்றுள்ளது. பஞ்சாலைகளில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணும் அளவில் வைத்துக் கொண்டு, நிரந்தரமற்ற தொழிலாளர்கள், கேம்ப் கூலி, மாங்கல்யத் திட்டம், திருமண உதவி திட்டம், காண்ட்ராக்ட் சிஸ்டம் போன்ற பெயர்களில் சட்டத்திற்குப் புறம்பாக வேலைக்கு அமர்த்தி, குறைந்த கூலிக்கு கால நேரம் இல்லாமல் வளாகத்திற்குள்ளேயே அடைத்து வைத்து வேலை வாங்கும் சூழ்நிலையும், பஞ்சாலைகளில் இருந்து வருகிறது. சட்டப்படியான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் மறுக்கப்படுகிறது. **ESI, PF** போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை வழங்கும் போனஸ் போன்றவைகள் நிர்வாகத்தின் இஷ்டபூர்வமானதாக மாற்றப்பட்டுள்ளது.

அரசின் உதவிகள், திட்டங்கள் எதுவாக இருந்தாலும், தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை எந்த முன்னேற்றமும் இன்றி, கிணற்றில் போட்ட கல் போன்ற நிலை தான் உள்ளது. உற்பத்தி துறையில் உள்ள தொழிலாளர்களைப் பற்றி உற்பத்தியாளர்கள் கண்டுகொள்வதில்லை. அரசும் அதைப்பற்றி சட்டை செய்யாமல் இருந்து வருகிறது.

இந்த நெருக்கடியிலிருந்து ஜவுளித் தொழிலை காப்பாற்ற வேண்டுமென்றால், தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்களும் தொழிலாளர்களைப் பிரதிநிதிப்படுத்தும் தொழிற்சங்க இயக்கங்களும் இணைந்து குரல் கொடுத்தால் மட்டுமே மத்திய, மாநில அரசுகளை பணியவைக்க முடியும். இதைத் தொழில் நிறுவனங்களும், அந்தந்த அமைப்புகளும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

ஒன்றிய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை, உலகமயம், தனியார்மயம், தாராளமயம் மற்றும் புதிய ஜவுளிக் கொள்கை போன்ற நடவடிக்கைகளால் பஞ்சாலைகள், அதில் பணிபுரியும் பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதோடு பணமயமாக்கும் கொள்கை அறிவிப்பினால் பொதுத்துறை சார்ந்துள்ள ஜவுளி தொழில்களில் அசையும் சொத்து, அசையாச் சொத்துக்களை விற்பனை, செய்யும் நடவடிக்கையும் நாட்டில் ஒரு சமூகப் பதற்றத்தை உருவாக்கும்.

ஜவுளி தொழில் சார்ந்த தொழில் களையும், தொழிலாளர்களையும் காப்பாற்ற மத்திய மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு கீழ்காணும் கோரிக்கைகளுக்கு தீர்வு காண முன்வரவேண்டும்.

ஜவுளித் தொழிலையும், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

1. இந்திய காட்டன் கார்ப்பரேஷன் (**CCI**), பருவகாலத்தில் பருத்தியை அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

2. இடைத்தரகர்கள் பஞ்சு கொள்முதல் செய்யும் ஆதிக்கத்தை முற்றாக ஒழிக்கவேண்டும்.

3. ஆன்லைன் பஞ்சு வர்த்தகத்தை முற்றிலுமாக தடை வேண்டும்.

4. பின்னலாடை நிறுவனங்களுக்கு நியாயமான கட்டுப்படியாகும் விலைக்கு ழிஜிசி ஆலைகளை முழுமையாக இயக்கியும், கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகவும் நூல் உற்பத்தி செய்து கொடுக்கவேண்டும்.

5. பஞ்சு ஏற்றுமதியை முழுமையாக தடை செய்ய வேண்டும். தேவைக்கு அதிகமாக பஞ்சு இருக்குமானால் ஏற்றுமதி செய்யலாம்.

6. பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சு, வெளி நாட்டிலிருந்து, இறக்குமதி செய்யும் போது மத்திய இறக்குமதிக்கான 11% சதவீத இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும்.

7. மத்திய அரசு பஞ்சின் சராசரி விலையை தனது கட்டுக்குள் கொண்டு வந்து, விலை உயராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் விலையைப் போல, பஞ்சு விலையை உயர்த்தாமல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

8. ஸ்பின்னிங் மில்களுக்குத் தேவையான அட்டை கோன் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு, பேப்பர் விலையை உயர்த்தாமல் கட்டுபடியாகும் நியாயமான விலைக்கு அரசே வழங்க முன் வரவேண்டும்.

9. ஒட்டுமொத்த நூல் உற்பத்தியில் தமிழகத்தில் மட்டும் 45% சதவீதம் உற்பத்தி செய்வதால், தமிழ்நாட்டில், இந்திய காட்டன் கார்ப்பரேஷனின் கிளை ஒன்று தொடங்க வேண்டும்.

10. தமிழகத்தில் அதிகமான நூற்பாலைகள், ஆயத்த ஆடைகள், கைத்தறி, விசைத்தறி, நெசவு போன்ற தொழில்கள் இயங்குவதால் மூலப்பொருளான பருத்தி உற்பத்தியை தமிழகத்தில் அதிகரிக்க இடம் தேர்வு செய்து விவசாயிகளை ஊக்குவித்து, பருத்தி உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜவுளி தொழிலை சார்ந்தவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதை ஒன்றிய அரசு செய்யுமா? செய்ய வேண்டும்!

தொடர்புக்கு: **94430 90432**



# சங்கே முழங்கு!

## கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரியின், கல்விக் கட்டணத்தை குறைத்திடுக!

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கோரிக்கை

சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தை தமிழக அரசே 2013 ஆம் ஆண்டு முதல் ஏற்று நடத்திவருகிறது.

அப்பல்கலைக் கழகத்தில் இருந்த ராஜா முத்தையா மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளை, தமிழ்நாடு அரசின் உயர் கல்வித் துறையிலிருந்து, மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை வரவேற்புக்குரியன.

ஆனால், இக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணம் ,தமிழ்நாடு அரசின் இதர மருத்துவக் கல்லூரிகளுக்கு இணையாக குறைக்கப்படவில்லை.

தனியார் மருத்துவக் கல்லூரிகளைவிட கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இதனால் இக்கல்லூரிகளின் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ் படிப்புக்கு ரூ.13,610, பி.டி.எஸ் படிப்புக்கு ரூ.11,610, மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

ஆனால், தமிழ்நாடு அரசே ஏற்று நடத்தி வரும் கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரியில் (இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரியில்)

எம்.பி.பி.எஸ் பயிலும் மாணவர்களுக்கு ரூ 4 லட்சமும், பிடிஎஸ் மாணவர்களுக்கு ரூ 2.5 லட்சமும், கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

இந்த கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காக இக்கல்லூரி மாணவர்கள் நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர்.

அவர்களின் போராட்டங்களின் பொழுது தி.மு.க தலைமை ஆதரவை தெரிவித்தது.

தி.மு.க ஆட்சிக்கு வந்தால் இம்மாணவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தது.

இந்நிலையில், தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகும் கல்விக் கட்டணம் குறைக்கப்படாதது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கவலையையும், வேதனையையும் அளித்துள்ளது.

எனவே, ஏற்கனவே இரண்டாம் , மூன்றாம் நான்காம் ஆண்டுகளில்படித்துவரும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை ,இதர தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு இணையாக குறைத்திட தமிழ்நாடு அரசு உடனடியாக முன்வர வேண்டும்.

கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக மாணவர்களை வகுப்புகளுக்கு 31.03.2022 முதல் அனுமதிக்காதது, வருகைப்பதிவேட்டில் இருந்து மாணவர்கள் பெயர்களை நீக்குவதாக சுற்றறிக்கை அனுப்பி மிரட்டுவது போன்றவற்றை உடனடியாக கைவிட வேண்டும்.


கட்டணம் கட்டவில்லை எனக் கூறி சான்றிதழ் தர மறுப்பது சரியல்ல. மாணவர்களின் பிரச்சனைகளுக்கு தமிழ்நாடு அரசு உடனடித் தீர்வை காணவேண்டும் என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஹிஜாப் மற்றும் பகவத் கீதை - உண்மை பிரச்சனை என்ன?

## கல்வி நிறுவனங்களைக் காவிமயப்படுத்தும் முயற்சிகள்





- ஹரீஷ் பாலா

**கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் தடை சுற்றறிக்கையைக் கர்நாடகா உயர்நீதிமன்றம் மார்ச்15 தீர்ப்பில் ஏற்றது. அத்தீர்ப்பில் குரானில் எங்கேயும் ஹிஜாப் அணிவது இஸ்லாத்தின் முக்கிய வழக்கமாகக் குறிப்பிடப்படவில்லை என்றது. தீர்ப்பை அடுத்து முஸ்லீம் மாணவிகள் பலரும் ஹிஜாப் அணியாது தேர்வுகளில் கலந்து கொள்வதில்லை என்பதைத் தேர்ந்தெடுத்தனர். ஒன்று, ஹிஜாப் அணியாமல் கல்வியைத் தொடர்வது அல்லது வீட்டிலேயே இருப்பது என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். பலரும் தேர்வில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவைத் தேர்ந்தெடுத்தது மிகவும் அபாயகரமானது.**

ஹிஜாப் மத வழக்கமா இல்லையா என்பதை நீதிமன்றம் ஆராய்ந்தது. ஆனால், கல்வி சீருடை வழிகாட்டல்களை மீறாமல் சீருடை வண்ணத்திலேயே ஹிஜாப் அணிவது அவர்களைக் கல்லூரியில் நுழைய அனுமதிக்க அல்லது அனுமதி மறுக்கப் போதுமான அடிப்படையாகுமா எனவும் நீதிமன்றம் பரிசீலித்திருக்க வேண்டும். பொதுஇடங்களில், குறிப்பாகப் பள்ளிகளில், ஆடை அணிவதை ஒழுங்குபடுத்தலாம்; ஆனால், கூடுதலாக ஒரு சிறு துணியைச் சீருடை வண்ணத்திலேயே அணிவதை ஒழுங்கு மீறலாகக் கருதக் கூடாது.

பிரச்சனையை அமைதியாகத் தீர்ப்பதில் தோல்வி அடைந்து, வெறும் பார்வையாளராக மௌனமாக இருந்துவிட்ட பசவராஜ் பொம்மை தலைமையிலான பாஜக அரசையும் நீதிமன்றம் கண்டித்திருக்க வேண்டும்.

இஸ்லாத்தின் அடிப்படை வழக்கம் என்று பிரச்சனையைக் கொண்டு செல்லாமல், ஹிஜாப் அணிவது தனிநபர் விருப்பத் தேர்வாக வேண்டும் என மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வாதாடி இருக்க வேண்டும். குறிப்பிட்ட வழக்கம் மத அடிப்படை வழக்கம் என நிரூபிப்பது பல சமயங்களின் ஆதரவாளர்களுக்கும் கடினமான ஒன்று; ஏனெனில் பல சமயங்களிலும் பல்வேறு பிரிவுகள், உட்பி ரிவுகள் உள்ளன அவைகளுக்கிடையே ஒவ்வொரு வழக்கம் பற்றி பலப் பல மாறுபட்டத் தேர்வுகளும் கருத்துகளும் உள்ளன. இதற்கு மேலும், எது ‘அடிப்படை வழக்கம்’ என அளவிடும் அளவுகோல்கள் நிலையாக வரையறுக்கப்பட்டதில்லை, அவை எண்ணிறந்தன. எது அடிப்படை வழக்கம் என்ற பார்வைகள் மனிதருக்கு மனிதர் மாறும், நீதி மன்றங்களும்கூட வேறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளன. உதாரணத்திற்கு, இந்துயிசத்தில் நெற்றில் குங்குமம் அணிவது அடிப்படை வழக்கமா இல்லையா என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினமானது.

இக்கருத்துகள் குறித்தெல்லாம் நீதிமன்றங்கள் பரிசீலிக்கத் தொடங்கினால், வழக்கு விசாரணைகள் (மதப் பிரசங்கச்) சமயங்களின் வகுப்புகளாகிவிடும்.

ஹிஜாப் சச்சரவின் பின் மறைந்துள்ள அரசியலைப் பார்த்தால் தான், இப்பிரச்சனையின் பேரளவிலான முழு பரிமாணத்தையும் ஒருவர் புரிந்து கொள்ள முடியும்.

ஹிஜாப் பிரச்சனையைப் பயன்படுத்தி இரு தரப்பு மதவாத அடிப் படைவாதிகளும் இளம் மாணவர்களின் மனங்களில் மத வாத விஷத்தை விதைக்க முயல்கிறார்கள். ஹிஜாப் பிரச்சனை தொடங்குவதற்கு முன்பு கர்நாடக மாநில மாணவர் சமுதாயத்திற்கு மத்தியில் வேறுபாடுகள் எதுவும் இருந்ததில்லை.

சில மாணவர்கள் காவித் துண்டுகளை அணிந்து போராடியதற்குப் பின்னே மதவாதச் சக்திகளின் ஆதரவு உள்ளது என்பது தெளிவு; அவர்கள் இப்பிரச்சனையிலிருந்து அரசியல் ஆதாயத்தை அறுவடை செய்ய முயற்சி செய்கிறார்கள்.

ஒரு கல்லூரியில் ஆரம்பித்த பிரச்சனை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது. லட்சக் கணக்கான எண்ணிக்கையில் ஒரே மாதிரியான துண்டுகள் மாநிலம் முழுவதும் எப்படி மாண வர்களுக்குக் கிடைத்தது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. இத்தனை லட்சம் காவித் துண்டுகள் எங்கிருந்து வந்தன? மற்றும் அதற்கான பெரும் தொகையைச் செலவு செய்தது யார்? என்பதும் மேலும் விசாரிக்கப்பட வேண்டியதாகும்.

**உண்மையான பிரச்சனை ஹிஜாப் அல்ல, மாறாக முஸ்லீம் சமுதாயத்திலிருந்து பெண்கள் கல்வி பெறுவதே பிரச்சனை. ஒரு புறம், தங்கள் மதத்தைச் சேர்ந்த மாணவிகளின் வாய்ப்புக்களை முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த படித்த பெண்கள் பறித்துச் சென்றுவிடுவதாக இந்து அடிப்படைவாதச் சக்திகள் கருதுகிறார்கள். மறுபுறம், கல்வி பெற்ற முஸ்லீம் பெண்கள் தங்களைத் தாங்களே (மதவாதக் கட்டுக்களிலிருந்து) சுதந்திரமாக விடுவித்துக் கொள்கிறார்கள் என்று கருதும் முஸ்லீம் அடிப்படைவாதிகள் சிலர், அது தங்கள் சமுதாயத்திற்கு நல்லதல்ல என நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பும் கவலையும், கல்வி, வேலைவாய்ப்பின் மூலம் பெண்கள், ஆண் ஆதிக்கத்தைக் கடந்துவிடுவார்கள் என்பதே. இரு தரப்பு மத அடிப்படைவாதச் சிறு கும்பலே இப்பிரச்சையின் பின்னே முழுமையாக உள்ளவர்கள்.**

ஹிஜாப் பிரச்சனையில் கல்வி நிறுவனச் சீருடை சமத்துவத்திற்காக எனப் போராடிய செயற்பாட்டாளர்கள் என அழைத்துக் கொள்பவர்கள் எவரும், தற்போது குஜராத் பள்ளி பாடத் திட்டத்தில் பகவத் கீதையைச் சேர்ப்பது என்ற குஜராத் அரசின் முடிவைப் பற்றி வாய் திறவாது மௌனமாக இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டு காண வேண்டும்.

குஜராத் மாநில அரசு, 6 முதல் 12வரையான வகுப்புகளின் பாடத் திட்டத்தில் ஸ்ரீமத் பகவத் கீதையைச் சேர்ப்பது என முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமாக அரசு வெளியிட்டச் சுற்றறிக்கையில் இம்முடிவின் பின்னுள்ள யோசனை, “ஒரு பெருமித உணர்வு மற்றும் மண்ணின் பாரம்பரியத்துடன் தொடர்பு இவற்றை வளர்ப்பது” என விளக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இடத்தில் எழும் கேள்வி யாதெனில், மாணவர்கள் பெருமிதம் கொள்ள வேண்டிய பாரம்பரியம் எது?


நம்முடைய பன்முகக் கலாச்சாரம் மற்றும் பல்வேறு மத நம்பிக்கைகளைச் சார்ந்த இந்தியச் சமூகத்தில் ஒரே ஒரு ஒற்றைப் பாரம்பரியம் இல்லாதபோது, எவ்வாறு பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநில அரசு கீதையைத் தேர்ந்தெடுத்தது? இது, ஒரு குறிப்பிட்ட மதத்தை, பாரம்பரியத்தைப் பிற மதங்கள் மற் றும் பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த மாணவர்கள் மீது கட் டாயமாகத் திணிப்பது என்பதைத் தவிர வேறில்லை.

நமது நீண்ட நவீன வரலாற்றில் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் தன் சொந்தக் காலில் நிற்கும் சுயசார்புக்காகப் பெண்களிடையே எழுந்துள்ள ஆவல் விழைவின் எழுச்சி சமீபத்திய நிகழ்வுப் போக்காகும். பெண்களின் சக்திமிக்க அந்த விருப்பத்திற்கு இடை யூறாக, ஹிஜாப் அல்லது கீதை போன்ற மதம் சார்ந்த வேறு பிரச்சனைகள், குறுக்கே வந்துவிடக் கூடாது என்பதே முற்போக்கானவர்கள் மற்றும் முற்போக்கு அமைப்புகள் அனைவரின் முக்கிய அக்கறையாக வேண்டும்.

ஹிஜாப் பிரச்சனை தற்போது உச்சநீதிமன்றத்தில் உள்ளது. இப்பிரச்சனையைப் பல்வேறு கோணங்களில் உச்சநீதிமன்றம் பரிசீலனை செய்யும் என நாம் நம்புகிறோம்.

வகுப்பறைகள் பன்மைத்துவத்தின் உண்மையான கருத்துகள் செழித்து வளர வேண்டி இடம். அனைத்து மத மற்றும் கலாச்சாரத் தடைக் கற்களைப் புறம் தள்ளி, இந்திய நாடு ஒரு பன்மைத்துவ நாடு, மற்றும் அதன் உண்மையான சாரம் ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்ற தாரக மந்திரத்தில் இருக்கிறது என்பதை மாணவச் சமுதாயம் ஒன்றுபட்டு மீண்டும் உறுதிப்படுத்தி நிலைநிறுத்த வேண்டும்!

நன்றி: நியூ ஏஜ், தமிழில் : **நீலகண்டன்**



# உலகில் அமைதி நிலவிட

-டி. ராஜா

**ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே தற்போது நடைபெற்று வரும் இராணுவ மோதலில் ஒரு அமைப்பின் மீது அனைவரது கவனமும் குவிந்து வருகிறது.**

அந்த அமைப்பின் பெயர் நேட்டோ ஆகும். நடைபெற்று வரும் இராணுவ மோதலின் நெடுகிலும் இந்த அமைப்பின் பெயர் தொடர்ந்து உச்சரிக்கப்படுவதை நாம் பார்க்க முடிகிறது. அபகீர்த்தியின் அடையாளமான **North Atlantic Treaty Association** என்ற அமைப்பு தான் **NATO** என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் சோவியத் சோஷலிச குடியரசு ஒன்றியத்தின் எழுச்சிக்கு எதிரான மேற்கு உலகின் பதில் நடவடிக்கையாகவே நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஒரு திட்டமிட்ட, சோஷலிச பொருளாதார நாடாக சோவியத் ஒன்றியம் அனைத்து துறைகளிலும் அதிவேக வளர்ச்சி அடைந்தது. அருவருக்கத்தக்க நாசிச மற்றும் பாசிச சித்தாந்தங்களை ரஷ்ய மக்களின் உதிரமும் உழைப்பும் வெற்றி கொண்டன. பெர்லின் மாநகரில் பட்டொளி வீசிப் பறந்த செங்கொடி உலகம் முழுவதிலும் இருந்த முதலாளிகளை அஞ்சி நடுக்கமுறச் செய்தது.

சோஷலிச சித்தாந்தத்தின் பரவலைத் தடுத்து நிறுத்திட ஏகாதிபத்திய சக்திகள் வியூகம் ஒன்றை வகுத்தன. நேட்டோ அமைப்பு அந்த வியூகத்தின் இராணுவக் கரம் என்றானது. ‘கூட்டுப் பாதுகாப்பு’ என்ற மேலோட்டமான கருத்தை முன் வைத்து அமெரிக்கா தலைமையில் உலகின் முக்கியமான முதலாளித்துவ நாடுகளுக்கு இடையேயான ராணுவக் கூட்டாகவே நேட்டோ அமைப்பு தொடங்கப்பட்டது. சோவியத் ஒன்றியத்தையும், கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் இருந்த சோஷலிச அரசுகளையும் சுற்றி வளைப்பது தான் அதன் உண்மையான நோக்கமாக இருந்தது. மேற்கு ஐரோப்பாவிற்கு சோவியத் ஒன்றியத்தின் ராணுவ அச்சுறுத்தல் இருப்பதாக மேற்கு உலகம் கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டது.

மேற்கு ஜெர்மனியை இணைத்துக் கொண்டதோடு, அந்தப் பிராந்தியங்களில் நடைபெற்று வந்த காலனிய எதிர்ப்பு இயக்கங்களைத் தடுத்து நிறுத்திட இராணுவமயத்தையும், ஆயுதகுவிப்பையும் நேட்டோ தொடங்கிய பிறகு தான் சோவியத் ஒன்றியம் தலைமையிலான வார்சா ஒப்பந்தம் உருவானது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தச் சிக்கலான காலகட்டத்தில் நடைபெற்று வந்த தேசிய விடுதலை இயக்கங்களைச் சோவியத் ஒன்றியம் ஆதரித்தது.

1990களின் தொடக்கத்தில் சோவியத் ஒன்றியம், கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் இருந்த சோஷலிச அரசுகள் சிதைவுற்ற பிறகு, நேட்டோ அமைப்பு தொடர்ந்து இயங்குவதற்கான எந்தவொரு முதன்மையான காரணமும் இல்லை. இந்த இராணுவ அமைப்பைக் கலைப்பதற்குப் பதிலாக, அமெரிக்காவின் மேலாதிக்க அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு ஊடகமாக நேட்டோவை ஏகாதிபத்திய சக்திகள் மறுவடிவமைப்பு செய்தன.

ஏகாதிபதியத்தைச் சமபலத்துடன் எதிர்த்து நின்ற சோவியத் ஒன்றியம் தகர்ந்தது. அமெரிக்கா, அதன் ஒற்றைத் தலைமையை உலக அமைப்பின் மீது திணிக்க தொடர்ந்து முயன்றது. இந்த வளர்ச்சிப் போக்குகளுக்கு ஏற்றாற்போல, நேட்டோ அமைப்பு அதனை விரைவாகத் தகவமைத்துக் கொண்டது. கலைக்கப்படுவதற்கு பதிலாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ நீள்கரமாக நேட்டோவின் விரிவாக்கம் தொடங்கியது. நேட்டோவின் விரிவாக்கமும், தலையீடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக மனிதகுலத்திற்கு மாபெரும் நெருக்கடிகளை உண்டாக்கின. பூமண்டலத்தில் நேட்டோ தடம் பதித்த நாடுகள் அனைத்திலும் பேரழிவும், ஸ்திரத்தன்மையற்ற நிலையும் தான் அதன் முத்திரைகள் என்றானது.





**பனிப்போர் சகாப்தத்தில் நேட்டோ அமைப்பு ஒரு முறை கூட இராணுவத் தலையீட்டை மேற்கொண்டதில்லை. சோவியத் ஒன்றியம் தகர்க்கப்பட்ட பின்பு தான் நேட்டோவின் தலையீடுகளும், விரிவாக்கமும் தொடங்கியது. அமெரிக்க மேலாதிக்கத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதே நேட்டோ அமைப்பின் உள்நோக்கம் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. எனவே, அமெரிக்க மேலாதிக்க அபிலாஷைகளுக்கு எதிராக களம் காணும் எந்த ஒரு நாடும் நேட்டோவின் பரம எதிரியாகக் கருதப்படுவது இயல்பான ஒன்றாகும்.**

நேட்டோ அமைப்பு ஒரு அங்குலம் அளவு கூட கிழக்கு நோக்கி விரிவடையாது என்று மிக்கைல் கோர்பச்சேவுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் தொடர்ச்சியான எச்சரிக்கைகளுக்குப் பிறகும் கூட நேட்டோ விரிவடைந்தது. அதில் தற்போது 30 நாடு கள் இடம்பெற்றுள்ளன. 12 நாடுகளை மட்டுமே கொண்டிருந்த நேட்டோவில் தற்போது ரஷ்யாவைத் தவிர, வார்சா ஒப்பந்தத்தில் பங்கேற்ற நாடுகள் அனைத்தும் உறுப்பினர்களாக உள்ளன.

சோவியத் ஒன்றியம் சிதைவுற்ற பிறகு, சர்வதேச அரங்கில் நேட்டோவின் தலையீடுகள் பற்றிய ஒரு மேலோட்டமான மதிப்பீட்டை மேற்கொண்டேமேயானால், அந்த அமைப்பு எவ்வாறு உலகின் பல பகுதிகளில் ஒரு மோசமான சுரண்டல் மற்றும் அடக்குமுறை அமைப்பாகச் செயல்பட்டது என்பது பற்றிய ஒரு அறிவார்ந்த சிந்தனை நமக்கு உண்டாகும்.

கொசோவோவில் நேட்டோவின் தலையீடு நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ‘‘சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் பூரண மனித உரிமைகளைப் பெற்று, பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் அனைவரும் பாதுகாப்பாக வாழக்கூடிய ஒரு அமைதியான,

---



# ஒப்பில்லாத தலைவர்

-க.முத்தியாலு

**பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கர்னால் என்னும் ஊரில் ராம்லால் சோனா தேவி இணையருக்கு 8.4.1922ல் பிறந்தவர்தான் தோழர் ஓம்பிரகாஷ் குப்தா.**

கர்நாலில் ஆரம்பக் கல்வியையும், மல்டான் மற்றும் லாகூரில் உயர்கல்வி பயின்றார். மறைந்த பிரதமர் ஐ.கே. குஜ்ரால், கல்லூரியில் இவருக்கு மூத்தவர். லாகூர் கல்லூரியில் பயிலும் போதே அகில இந்திய மாணவர் பெருமன்றத்தில் சேர்ந்து அந்நிய ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற இயக்கங்களில் கலந்து கொண்டவர்.

இரண்டாம் உலகப் போரின் இறுதி நாட்களில் டில்லி இராணுவ தலைமை அலுவலகத்தில் குப்தா தற்காலிக ஊழியர். தொழிற்சங்க உணர்வூட்டவும், கம்யூனிச கருத்துகளை பரப்பவும் முயன்றதற்காக பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

10.5.1946ல் முதல் ஊதியக்குழு அமைக்கப்பட்டது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைவராகவும், டால்வி பொதுச் செயலாளராகவும் இருந்த அகில இந்திய தபால்காரர்கள் மற்றும் கடைநிலை ஊழியர் சங்கம் 11.7.1946 முதல் 3.8.1946 வரை 23 நாட்கள் நாடுதழுவிய வேலைநிறுத்தம் செய்தது. அஞ்சல் மற்றும் ஆர்.எம்.எஸ். ஊழியர் 3ஆம் பிரிவு சங்க அன்றைய பொதுச் செயலாளர் காம்ப்ளே வேலைநிறுத்தத்திற்கு எதிராக அறிக்கை வெளியிட்டார். எனவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சங்கத் தலைவர் தாதா கோஷ் என்று அழைக்கப்பட்ட பூபேந்திரநாத் கோஷ் கல்கத்தாவில் மேற்குவங்க, அசாம் மாநிலத் தோழர்களை முழுமையாக வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளச் செய்தார். வேலைநிறுத்தம் முடிந்த பிறகு தாதா கோஷ் வெளியார் ஒருவரை பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்க விரும்பினார். ஏஐடியூசி–ன் உதவியை நாடினார். 3 பெயர்களை பரிந்துரை செய்தனர். அதில் ஓம் பிரகாஷ் குப்தாவை, தாதா கோஷ் தேர்வு செய்தார். 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் நமது நாட்டின் ஒற்றுமை சீர்குலைக்கப்பட்டு இந்தியா பாகிஸ்தான் என்று பிளவுபட்டது. அதற்கு இரண்டு நாட்கள் முன்பு 13.8.1947ல் **UPTW (Union of P&T Workers)** என்ற அமைப்பு உருவானது.

ஆங்கிலேயர் ஆட்சியில் அமைக்கப்பட்ட ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி அகவிலைப்படி வழங்க பிரதமர் நேருவின் சுதந்திர அரசு மறுத்தது. மீண்டும் வேலைநிறுத்தம் செய்ய வாக்கெடுப்பு நடத்தும் முன் நேருவை, ஜெயபிரகாஷ் நாராயணன், டால்வி, குப்தா மற்றும் பலர் சந்தித்து அகவிலைப்படி வழங்க வலியுறுத்தினர். இங்கிலாந்தில் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு அளித்த நேருவின் நிலையை சுட்டிக்காட்டினர்.

சுதந்திர அரசுக்கு எதிராக தபால் தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்த அறிக்கை வழங்கப்பட்டது. அதில் கையெழுத்திட்ட பெருமைக்குரியவர் ஓம் பிரகாஷ் குப்தா.

1949, மார்ச் 9ஆம் நாள் வேலைநிறுத்தம் துவங்குவதாக அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு ஊழியர்கள் அகவிலைப்படியில் ரூ. 10 உயர்வு அறிவிக்கப்பட்டது. எனவே, வேலைநிறுத்தம் துவங்கும் முன்பே விலக்கிக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு சென்னையில் நடக்க இருந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்த குப்தாவையும், டெல்லியில் தாதா கோஷ், ஜனக், மேலும் வங்கத்தில் நூற்றுக்கணக்கான தோழர்களும் 22.2.1949ல் கைது செய்யப்பட்டனர்.

தோழியர் ஜனக் அன்று டெல்லி டெலிபோன் சங்கத்தின் செயலர், டெலிபோன் ஆப்பரேட்டர், தோழர் குப்தா 15.11.1949 ல் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் 8.12.1949ல் கைது செய்யப்பட்டார். குப்தா சிறையிலிருந்தபோது அவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றினர். சிறையிலிருந்து வெளிவந்த பின் குப்தா, டெல்லியில் தொலைபேசி இயக்குனராக பணியாற்றி, வேலைநிறுத்தம் காரணமாக கைதாகி, வேலையிழந்த தோழர் ஜனக் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.



விடுதலை பெற்ற இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் 1952ல் நடைபெற்றது. குப்தா டெல்லி தொகுதி ஒன்றில் போட்டியிட்டார். அது ஒரு அரசு ஊழியர்கள் நிறைந்த பகுதி. சோசலிஸ்ட் கட்சியின் தலைவரான சுசேதா கிருபளானி வெற்றி பெற்றார். குப்தாவின் பிணையத் தொகை பறிபோனது.

அமைச்சர்களாக இருந்த ரஃபி அகமது கித்வாய், ஜெகஜீவன்ராம் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கை அடிப்படையில் தோழர் குப்தா, மற்ற தலைவர்களின் உதவியோடு 24.11.1954ல் **NFPTE** சம்மேளனம் உருவானது. தாதா கோஷ் **NFPTE**யின் முதல் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். குப்தா **E3** மற்றும் **RMS Class IV** சங்கத்தின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது ஊதியக்குழு அமைக்க வலியுறுத்தி 1957, ஆகஸ்ட் 9ஆம் நாள்வேலைநிறுத்தம் செய்ய



**எங்கெல்லாம் ஒரு புரட்சிகரக் குமுறல் ஏற்படுகிறதோ! அங்கெல்லாம் அதன் பின்னணியில் ஏதேனும் சமுதாயத் தேவை கட்டாயம் இருந்தே தீர வேண்டும்.**

**– எங்கெல்ஸ்**

# நேட்டோ கலைக்கப்பட வேண்டும்!




ஜனநாயக நாடாக கொசோவோவைக் கட்டமைப்பது என்ற சர்வதேச சமூகத்தின் அரசியல் நோக்கத்திற்கு ஆதரவாகவே கொசோவோ பிரச்சனையில் தலையிட்டதாகப் பரப்புரை செய்தது. நேட்டோவின் கண்மூடித்தனமான குண்டுமழையால் 500க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். 6,000க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். 11 வாரங்கள் நடைபெற்ற கொசோவோ தாக்குதலில், சீன தூதரகத்தின் மீது வெடிகுண்டு தாக்குதல் தொடுக்கவும் நேட்டோ தயங்கவில்லை. அப்போதைய யூகோஸ்லாவியா மீதான வெடிகுண்டு தாக்குதலில் கொத்துக் குண்டுகளையும் **(Cluster Munition)** பயன்படுத்தியது.

ஆப்கானிஸ்தான் பிரச்சனையிலும் நேட்டோ ஒரு மாபெரும் சக்தியாக இருந்தது. அங்கு போர் நடைபெற்றபோது 2001–2019 வரை, 1,76,000 நபர்கள் உயிரிழந்தனர் என்று பிரவுன் பல்கலைக்கழகம் மேற்கொண்ட கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. உயிரிழந்தவர்களில் 46,319 நபர்கள் அப்பாவி பொதுமக்கள் ஆவர். போரின் பின்விளைவுகள் காரணமாகவும், குடிநீர், உணவு மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இன்றி நோய்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பிரவுன் பல்கலைக்கழக கணக்கெடுப்பில் சேர்க்கப்படவில்லை என்பதால் இதுவரை கிடைத்துள்ள விவரங்களும் உண்மையை எதிரொலிப்பதாக இல்லை. ஆப்கானிஸ்தானில் 2,12,191 நபர்கள் உயிரிழந்துள்ளனர் என்று மற்றொரு நிறுவனம் தகவல் தெரிவிக்கிறது.

**அமெரிக்காவின் இராணுவ தலையீட்டால் ஈராக்கில் 2003 முதல் 2010 வரையில், 1,50,000 நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 1,22,000 (80%) நபர்கள் அப்பாவி பொதுமக்கள் என்று விக்கிலீக்ஸ் வெளியிட்ட குறிப்புகள் தெரிவிக்கின்றன. அதுபோல, லிபியாவில் நேட்டோவின் தலையீடு காரணமாக 400-க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.**

ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா, ஏமன் ஆகிய நாடுகளில் கடந்த இரண்டு தசாப்தங்களில் போரில் நேரடியாக கொல்லப் பட்டோரின் எண்ணிக்கை சுமார் 10 லட்சம் ஆகும். இதில், போரில் ஈடு படாத பொதுமக்கள் 4 லட்சம் ஆவர். போரின் பின் விளைவுகள், புலம்பெயர்தல், காயமடைதல், சொத் துக்கள் இழப்பு, உளவியல் பாதிப்புகள் மற்றும் புவி சார் அரசியல் நிச்சயமற்றதன்மை ஆகியவை உயி ரிழந்தோர் குறித்த எண்ணிக்கையின் மூலம் வெளிப்படுவதில்லை. அமெரிக்கா தலைமை யிலான நேட்டோவின் பலம் பொருந்திய இராணுவக் கட்டமைப்பில் அதிநவீன ஆயுத குவியலும் அடங்கும். ஒரு நாட்டின் எல்லைப் பகுதியை நேட்டோ நெருங்கினால், அந்நாட்டில் மோசமான பின்விளைவுகள் ஏற்ப டுமோ என்ற அச்ச உணர்வு நம்மிடையே எழுவது இயல்பானது ஆகும். 2019 ஆம் ஆண்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் மொத்த இராணுவ செலவினம் 1.03 6 டிரில்லியன் டாலர் ஆகும். உக்ரைனில் நேட்டோ நாடுகளுடன் மோதலில் ஈடுபட்டுள்ள ரஷ்யாவின் இராணுவ செலவினம் 60 பில்லியன் டாலர் மட்டுமே ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ளவற்றின் அடிப்படையில் அணுகும் போது, சர்வதேச நிகழ்வுகளில் நேட்டோ மற்றும் அதன் பங்கு குறித்த ஒரு சரியான மதிப்பீட்டை எவரும் எளிதில் முன்வைக்க முடியும். சோவியத் ஒன்றியம் என்னும் பாதுகாப்பு அரண் அகற்றப்பட்ட பிறகு, ஐரோப்பிய கண்டத்தில் அமெரிக்காவின் அயல்நாடு மற்றும் இராணுவ கொள்கை நோக்கங்களை அடைவதற்கான ஆயுதமாக நேட்டோ உருப்பெற்றது. இந்தப் போக்கு ஆசியாவிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. சர்வதேச நிகழ்வுப் போக்குகளில் நேட்டோவின் தொடர்ச்சியான விரிவாக்கம் மற்றும் தலையீடுகள் உலக அமைதிக்கு ஒரு மாபெரும் அச்சுறுத்தலாகும்.

30 உறுப்பு நாடுகளுடன், உலக இராணுவ செலவினத்தில் சுமார் 60% ஐ மேற்கொள்ளும் நாடுகளின் அமைப்பு என்ற முறையில் சர்வதேச அரங்கில் நேட்டோவின் இருப்பும், வல்லமையும் அளவிட முடியாததாகும். சோவியத் ஒன்றியம் போல் சமபலத்துடன் எதிர்த்து நிற்கும் சக்தி எதுவும் இல்லாததால், கடந்த மூன்று தசாப்தங்களாக அமெரிக்க எஜமானனின் தலைமையில் நேட்டோ அமைப்பு கேட்பார் எவரும் இன்றி தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகிறது. சர்வதேச அரங்கில் அனைத்து நாடுகளும் சமம் எனும் சமதள சாரத்தை முற்றாகச் சிதைக்கும் இது போன்ற ஓர் இராணுவக் கூட்டணியை உலகின் தென்பகுதியைச் சார்ந்த பல்வேறு பிராந்தியங்களும், அரசுகளும், அமைதியை விரும்பும் மக்களும் எதிர்த்திட வேண்டும்.

கூட்டுப் பாதுகாப்புக்காக **(Collective Security)** தொடங்கப்பட்ட நேட்டோ, தற்போது அமெரிக்க நலன்களுக்கு எதிரான நாடுகளுக்கு மோசமான பாதுகாப்பு அச்சுறுத்தலை உண்டாக்கி வருகிறது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஏகபோக முதலாளிகள் மற்றும் இராணுவ, ஆயுத தளவாட தொழில் நிறுவன கருவூலங்களுக்கு நேட்டோ அமைப்பு திறம்பட மடைமாற்றம் செய்து வருகிறது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான தற்போதைய இராணுவ மோதல் நேட்டோவின் விரிவாக்கத் தர்க்கத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தற்போது நடைபெற்று வரும் போரை நாம் சமரசமற்ற முறையில் எதிர்க்கிறோம். போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; இருநாடுகளும் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்திட வேண்டும்.

இந்தப் போரின் பின்புலத்தில் மட்டுமின்றி, சர்வதேச அளவில் நடைபெற்று வரும் பல இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னால் நேட்டோ இருப்பதையும், அந்த நடவடிக்கைகளை நேட்டோ இயக்கி வருவதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நேட்டோவின் தலையீடுகள் மனிதகுலத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் மாபெரும் இழப்புகளை ஏற்படுத்தி இருப்பது நிரூபணமாகி உள்ளது. எனவே, உலகில் அமைதி நிலவ வேண்டுமென்றால், நேட்டோ கலைக்கப்பட வேண்டும்.

தமிழில்: **அருண் அசோகன்**

# ...ர் ஓம் பிரகாஷ் குப்தா

அரசுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அரசுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று 2வது ஊதியக்குழு அமைக்கப்பட்டது.

இடைக்கால நிவாரணம் பற்றி முடிவு செய்ய அதிகாரம் இக்குழுவிற்கு வழங்கப்பட்டது. அசாம் ஈட்டுப்படி ஒப்புக்கொள்ளப்பட்டது. ணிஞி ஊழியர்களுக்கென தனி கமிட்டி அமைக்கப்பட்டது. 3ஆம் பிரிவு, 4ஆம் பிரிவு ஊழியர்கள் மத்தியில் லீவு, பென்ஷன், மருத்துவ வசதிகள் ஆகியவற்றில் இருந்த வேறுபாடுகள் நீக்கப்பட்டன. மகத்தான வெற்றி வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. தனது பெற்றோர் வழி தனக்குக் கிடைத்த பங்கை மூலதனமாக்கி புதுடில்லியில் தொழிற்சங்க தலைமையகத்தை தோழர் குப்தா உருவாக்கினார். தாதா கோஷ் பெயரை சூட்டினார்.

இரண்டாவது ஊதியக்குழுவின் பாதகமான பரிந்துரைகளை எதிர்த்து 1960 ஜூலை 11ஆம் தேதியிலிருந்து மத்திய அரசு ஊழியர் சங்கம் அனைத்தும் சேர்ந்து வேலைநிறுத்த அறிவிப்பு செய்தன. நேரு பேட்டி கொடுக்க மறுப்பு; அவசர சட்டம் போடப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களின் மாபெரும் வேலைநிறுத்தம் நடைபெற்றது. இந்த வேலைநிறுத்தத்தில் தபால் தந்தி ஊழியர்கள் முன்னணியில் நின்றனர், பெருமளவு பங்குபெற்றனர். ஐந்து புகழ்பெற்ற நாட்கள் என்று கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கேயால் பாராட்டப்பட்டது; **PSR** ஆஞ்சனேயலு, குப்தா, ராமமூர்த்தி, ஞானையா, பிரமநாதன் மற்றும் 900 பேர் கைது; சம்மேளன அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களின் அடிக்கடி நடைபெற்ற போராட்டங்களைத் தவிர்க்க இங்கிலாந்தில் உள்ளது போன்ற விட்லி **(Whitely)** கவுன்சில் அமைக்க அரசு முன்வந்தது. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் விவாதத்திற்குப் பிறகு திட்டம் தெளிவுபெற்றது. 1966 அக்டோபர் திங்கள் கூட்டு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது.

குறைந்தபட்ச ஊதியம், அகவிலைப்படி முழு நிவாரணம் ஆகிய கோரிக்கைகள் கூட்டு ஆலோசனைக் குழுவில் முடிவு காணப்படாததால் 1968, செப்டம்பர் 19, ஒரு நாள் மத்திய அரசு ஊழியர்களின் மகத்தான அடையாள வேலைநிறுத்தம் நடைபெற்றது. இப்போராட்டத்திலும் குப்தாவின் பங்கு மகத்தானது. வழக்கம்போல சம்மேளனம், சங்கங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது.

இந்த வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து **FNPTO** உருவாக்கப்பட்டது. அரசின் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் கொள்கை கைவிடப்பட்டது. மத்திய அரசு ஊழியர் சங்கம் அனைத்திற்கும் மீண்டும் அங்கீகாரம் வழங்க 1969, செப்டம்பரில் அரசு முடிவு செய்தது. ஆனால் **NFPTE**க்கு மட்டும் மறுக்கப்பட்டது. 9 அகில இந்திய சங்கங்களுக்கும், மாநிலச் சங்கங்களுக்கும் அங்கீகாரம் அளிப்போம். சம்மேளனத்திற்கும், கிளைகளுக்கும் அங்கீகாரம் இல்லை என்றது அரசு. வேலைநிறுத்தத்திற்கு முன்பு இருந்தது போன்று முழுமையான அங்கீகாரம் மீண்டும் வழங்க வற்புறுத்தி குப்தாவும், ஞானையாவும் காலவரையற்ற உண்ணா நோன்பு மேற்கொண்டனர். ஏழு நாட்கள் உண்ணா நோன்பு போராட்டத்திற்குப் பிறகு முன்புபோல அங்கீகாரம் கிடைத்தது.

மத்திய அரசில் சேவை அடிப்படையில் பதவி உயர்வு இல்லாதபோது தபால்தந்தி தொழிலாளர்களுக்கு 16, 26 ஆண்டுகளில் பதவி உயர்வு **Time-bound Promotion** பெற்றுத் தந்த பெருமைக்குரியவர் 3ஆம் பிரிவு ஊழியர்கள் ஒரு சிலராவது சேவை அடிப்படையில் (குரூப் **B)** அதிகாரிகளாகும் நிலையை உருவாக்கினார். இரயில்வேக்கு மட்டும் போனஸ் அறிவிக்கப்பட்டபோது தபால் தந்தி ஊழியருக்கும் போனஸ் கேட்டு அதிரடி வேலைநிறுத்த அறிவிப்பு செய்து போனஸ் இந்தியாவிலேயே அதிகமான போனஸை தொலைத் தொடர்பு ஊழியர்கள் பெற்றனர்.

புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்டபொழுது உலகம் முழுவதும் தொழிலாளர்கள் பலர் வேலையிழந்தனர். நவீனமயத்தை வரவேற்ற குப்தா ஒருவரைக்கூட வேலையிழக்க விடவில்லை. ஆளெடுப்புத் தடைச்சட்டம் இருந்தபோதும்கூட 40,000 **RTP**க்களையும் நாளொன்றுக்கு 1 மணி நேரமே வேலைபார்த்த பகுதிநேர ஊழியர்கள், கேசுவல் ஊழியர்கள் 1 லட்சம் பேரை நிரந்தரம் செய்து சாதனை படைத்தார். கேடர் சீரமைப்பை சிலர் எதிர்த்தபோது அதை வரவேற்று ஊழியர்களுக்கு சாதகமாக மாற்றி கேசுவல் ஊழியர் **TTA**வாகவும், 3ஆம் பிரிவு ஊழியர்கள் அதிகாரிகளாகவும் பதவி உயர்வு பெற வழி செய்தார்.


**தொலைத்தொடர்புத் துறை (கார்ப்பரேஷனாக) பொதுத்துறையாக மாற்றுவதால் ஏற்படும் நன்மை, தீமைகள் குறித்து விவாதித்து முடிவெடுக்க டாக்டர் ஆத்ரேயா தலைமையில் குப்தா உள்ளிட்ட 9 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. குப்தா மட்டும் பொதுத்துறையாக மாற்றக்கூடாதென எதிர்ப்பு கருத்து பதிவு செய்தார். குப்தா பொதுத்துறை கூடாதென எதிர்ப்புக் கருத்தைப் பதிவு செய்ததற்காக அவரை எப்போதும் விமர்சிக்கும் தலைவர்கள் உட்பட எல்லா சங்கத் தலைவர்களும் சேர்ந்து குப்தாவிற்கு பாராட்டுவிழா எடுத்தனர். தொலைத்தொடர்பு ஊழியர்களின் இல்லம்தோறும் இன்று தொலைபேசி உள்ளது. அனைவருக்கும் தொலைபேசி வேண்டும் என்ற கோரிக்கை வைத்து வெற்றிபெற்றவர் குப்தா. 5 லட்சம் DOT ஊழியர்கள், ஓய்வூதியர்கள் வீடுகளுக்கு வாடகையில்லா தொலைபேசி வழங்கப்பட்டது எவ்வளவு பெரிய சாதனை!**

1.10.2000 முதல் தொலைத் தொடர்புத் துறை **BSNL** ஆக மாற்றப்பட்டது. **BPTF, FNTO, NFPE** மூன்று சம்மேளனங்களின் சார்பில் வேலைநிறுத்த அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பேச்சுவார்த்தை நடைபெற்று **BSNL**ல் ஓய்வு பெறுவோருக்கு **DOT-BSNL** இரு சேவைகளையும் சேர்த்து அரசுப்பென்ஷன், அரசாங்க விதிகளின்படி பென்ஷன், அரசு நிதியிலிருந்து பென்ஷன், பணிப்பாதுகாப்பு, **BSNL** நிதி ஆதாரத்தோடு செயல்படுதல், **DOT**-யில் இருந்தபோது பெற்ற **GPF** விடுப்பு போன்றவை உறுதிசெய்யப்பட்டன. 1.10.2000த்தில் கேசுவல் பகுதிநேர ஊழியர் ஒருவர் மீதமின்றி எல்லோரும் நிரந்தர ஊழியராக மாற்றப்பட்டனர். **BSNL**ல் வந்த பிறகு யாராவது வேலை நீக்கம் செய்யப்பட்டால், அந்த நாள் வரை செய்த சேவைக்கு பென்ஷன் வழங்கப்படும் ஆகிய கோரிக்கைகள் ஏற்கப்பட்டவுடன் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இந்த வேலைநிறுத்தத்தில் குப்தாவின் பெருமுயற்சியின் காரணமாக இன்று ஓய்வு பெறுபவர்கள் நிம்மதியாக உள்ளனர்.

குப்தா அவர்களின் தொழிற்சங்க சேவையை பாராட்டி மராட்டிய முதலமைச்சர் அசோக் சவான் உலகத் தொழிலாளர் தினத்தன்று பீஷ்மாச்சார்யா விருது 2010ஐ வழங்கி பெருமைப்படுத்தினார். நேரு முதல் மன்மோகன்சிங்வரை அனைத்துப் பிரதமர்களுடனும் ரஃபி அகமது கித்வாய் முதல் கபில் சிபில் வரையான துறை அமைச்சர்களுடனும், தொழிலாளர் நலன் காக்க வாதாடியவர். முன்னணி தொழிற்சங்கத் தலைவர்கள் தோழர் ஷி.கி. டாங்கே, ஜோதிபாசு முதலான அரசியல் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றியவர். தொழிற்சங்க ஒற்றுமையே, தொழிலாளர் நலனையே எப்போதும் லட்சியமாகக் கொண்டு செயல்பட்டவர். 1946 முதல் 2006 வரை இடையறாது தொழிற்சங்கப் பணியாற்றிய தலைவர்கள் வேறு யாருமில்லை. 6.1.2013 அன்று தனது சிந்தனையை நிறுத்திக் ண்டார். தோழர் குப்தா தொழிலாளர் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருப்பார்.

*8.4.2022 குப்தாவின் நூற்றாண்டு நிறைவு*

தொடர்புக்கு: **9444666646**



**தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமென்றால் அது முதலில் தன்னை ஒரு வர்க்கம் என்ற முறையில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். - மார்க்ஸ்**

# சொத்துவரி உயர்வை வெகுவாக குறைத்திட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாடு அரசு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வசூலிக்கப்படும் சொத்துவரியை கடுமையான அளவில் உயர்த்தியுள்ளது. உயர்த்தப்பட்ட வரியை நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில் வசூலிக்கப்படும் என அறிவித்துள்ளது. அதாவது உடனடியாக உயர்த்தப்பட்ட வரியை செலுத்த வேண்டும் என்பது தான் அரசின் நிபந்தனையாகும்.

உள்ளாட்சியிலும் நல்லாட்சி அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப் போடும், நம்பிக்கையோடும் வாக்க ளித்த மக்களுக்கு வரி உயர்வு அதிர்ச்சி அளிக்கும்.

நகர்ப்பகுதி குடியிருப்புகளுக்கு 100 சதவீதமும், வணிக கட்டிடங் களுக்கு 150 சதவீதமும் வரி உயர்த் தப்பட்டிருப்பது தாங்க முடியாத சுமை யாகும். ஒன்றிய அரசின் 15 வது நிதி ஆணையத்தின் மீற முடியாத நிபந்தனையை ஏற்று வரி உயர்வு அறிவிக்கப்பட்டதாக கூறியிருப்பதும் வியப்பளிக்கிறது.

உள்ளாட்சிகளில் மக்கள் பிரதிநி திகள் செயல்படும் சூழலில் மன்றக் கூட்டங்களில் விவாதித்து வரி சீரமைப்பு செய்திருந்தால் ஜனநாயக வழிமுறை உறுதிப்பட்டிருக்கும். இது தவிர்க்கப்பட்டு நிர்வாக உத்தரவுக்கு மக்கள் பிரதிநிதிகள் கீழ் படிந்து செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

அடிப்படை வசதிகளுக்கும், மக் கள் நல்வாழ்வு பேணவும் வரி வசூலிப்பது அவசியம் தான் எனி னும், அது ஏற்கத்தக்கதாகவும், உகந்த மனநிலையில் செலுத்தத் தக்க தாகவும் அமைய வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட நகர்புற சொத்துவரி உயர்வை நிறுத்தி வைத்து, மறு பரிசீலனை செய்து, வெகுவாக குறைக்க முன் வர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து இளைஞர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில், பெட்ரோல், டீசல் விலை உயர்வை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு எஸ்.ஆதில் தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எம்.கே.மாதையன், சிபிஐ நகரத் துணைச் செயலாளர்கள் பாஸ்கர் ரெட்டி, நூர் மற்றும் நடைபாதை வியாபார சங்கம், ஆட்டோ சங்கம், மாதர் சங்கம், இளைஞர் பெருமன்ற தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தேன்கனிக்கோட்டை

தேன்கனிக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் பூதட்டியப்பா, நகர செயலாளர் சலாம் பேக், மாணவர் பெருமன்ற மாவட்ட துணை தலைவர் ஷாகுல் ஆகியோர் கண்டன உரையாற்றினர். முகுந்தன் நன்றி கூறினார்.

### பெட்ரோலிய பொருட்களின் தொடர் விலை உயர்வைக் கண்டித்து ஏப்ரல் 4 முதல் 10 வரை

# நாடு தழுவிய போராட்ட இயக்கம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்!

பெட்ரோலிய பொருட்களின் விலை தொடர்ந்து உயர்த்தப்படுவதைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பெட்ரோலிய பொருட்களின் விலை தொடர்ந்து உயர்த்தப்படுவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். கடந்த 10 நாட்களில் தொடர்ந்து 9 முறை விலை உயர்த்தப்பட்டுள்ளது.

தற்போது, அனைத்து மாநிலங்களிலும் ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை 100 ரூபாயைத் தாண்டிவிடும்; டீசல் விலை லிட்டருக்கு 100 ரூபாயை எட்டிவிடும். மும்பையில் வசிக்கும் மக்கள் ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூபாய் 116.72 ம், ஒரு லிட்டர் டீசலுக்கு ரூபாய் 100.94 ம் செலவிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. நாட்டிலேயே மும்பை மாநகரில் தான் பெட்ரோலிய பொருட்களின் விலை அதிகமாக உள்ளது.

உத்தர பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய ஐந்து மாநில சட்டமன்ற தேர்தலின் போது, வாக்காளர்களை ஏமாற்றத்தான் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்த்தப்படாமல் இருந்தது என்பதைப் பொதுமக்கள் உணர வேண்டும்.

சமையல் எரிவாயுவுடன் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் எரிவாயுவின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க அரசாங்கத்திற்குப் பிரச்சனையில் தவிக்கும் மக்கள் மீது சிறிதும் அக்கறையில்லை என்பதைத்தான் தொடரும் விலை உயர்வு நிரூபிக்கிறது. இது போன்ற விலை உயர்வு அன்றாட வாழ்க்கையில் பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையையும் அதிகரிக்கச் செய்யும் என்ற உண்மையைக் கூட மோடி அரசாங்கம் புறந்தள்ளுகிறது.

இந்த விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்றும், பெட்ரோலிய பொருட்களின் விலையை அரசாங்கமே தீர்மானிக்கும் முறையைத் திரும்பக் கொண்டு வர வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது.

இந்த விஷயத்தில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, அன்றாட வாழ்வில் மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை எண்ணெய் நிறுவனங்களின் விருப்பத்திற்கு விட்டுவிட முடியாது என்பதை அந்த நிறுவனங்களுக்கு உணர்த்த வேண்டும்.

பெட்ரோலிய பொருட்களின் இந்தத் தொடர் விலை உயர்வைக் கண்டித்து நாடு முழுவதிலும் ஏப்ரல் 4 முதல் 10 வரை ஒரு வார காலத்திற்கு தொடர் போராட்ட இயக்கங்களைக் கட்சி அமைப்புகள் தனித்தும், வாய்ப்புள்ள இடங்களில் ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் இணைந்தும் நடத்துமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு அறைகூவல் விடுக்கிறது.

இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அலைக்கழிக்கப்படும் பொதுமக்கள்




கள்ளக்குறிச்சி மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் துறைவாரியான பல அலுவலகங்கள் அமைக்கப்படாமல், போதிய அலுவலர்களும் நியமிக்கப்படாமல் பெயரளவில் மாவட்ட நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளது. விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டிலேயே விழுப்புரம் மாவட்டம் பெரிய மாவட்டமாக இருந்ததை பிரித்து கள்ளக்குறிச்சி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. தற்காலிகமாக கச்சராபாளையம் சாலையில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை புனரமைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

3 ஆயிரத்து 520 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 14 லட்சம் மக்கள் தொகையை கொண்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் ஆகிய 2 வருவாய் கோட்டங்களும், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம், கல்வராயன்மலை, உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் என 6 வருவாய் வட்டங்களும், கள்ளக்குறிச்சி (தனி), சங்கராபுரம், ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளையும், 9 ஊராட்சி ஒன்றியங்கள், 7 பேரூராட்சிகள், ,412 ஊராட்சிகள், 562 வருவாய் கிராமங்களை கொண்டுள்ளது.

மாவட்டம் தொடங்கி 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் தொழிலாளர் நலத்துறை, சமூக நலத்துறை, தாட்கோ போன்ற பல்வேறு துறைகளின் மாவட்ட நிர்வாக அலுவலகங்கள் கள்ளக்குறிச்சிக்கு வந்து சேரவில்லை. இதனால் பொதுமக்களின் கோரிக்கைகள் அதிகாரிகளால் செயல்படுத்தாமல் மாவட்டம் பிரிந்த காரணத்தை சொல்லி காலம் கடத்தி வருகின்றனர் இதனால் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சான்றுகளிலிருந்து பள்ளி கல்லூரி மாணவர்களின் சான்றுகள், வாரிசு சான்று, ஒருங்கிணைந்த சான்று, பிறப்பு பதிவு தவறிய சான்று, மின் இணைப்பு ஆட்சேபனை சான்று, மெய்த்தன்மைசான்று உள்ளிட்ட மாற்றுத்திறனாளிகள், வயதானவர்கள், ஆதரவற் றவர்கள், திருநங்கைகள், ஒடுக்கப்பட்ட நலிந்த பிரிவினர், சமுதாயத்தில் பின்தங்கியவர்கள், விவசாய கூலி தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள் உள்ளிட்டோருக்கு வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை தேவை களுக்காகவும், வீட்டு மனை பட்டா, பட்டா பெயர் மாற்றம், பெயர் திருத்தம், அளந்து அத்து காட்டுதல், சட்டிவிஷன் பட்டா, கிராம நத்தத்தில் அனுபவத்தில் உள்ள காலி மனைக்கு பட்டா தருவது, 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு ஆதி திராவிட நலத்துறையின் மூலம் வழங்கப்பட்ட இலவச மனைப் பட்டா கிராம பதிவேட்டில் கணக்கு திருத்தம் செய்து தர, அதேபோல 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவத்தில் இருந்து வரும் தரிசு நிலப்பட்டா வழங்குவது உள்ளிட்ட பல துறைகளின் செயல்பாடுகள் முற்றிலும் ஆமை வேகத்தைக் காட்டிலும் குறைவாக உள்ளதாக அலுவலகங்கள் வந்து செல்லும் மக்கள் குமுறுகின்றனர்.

குறிப்பாக புதிய கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் நிர்வாக அமைப்பு அடிமட்ட ஊழியரிலிருந்து மாவட்ட அளவிலான அதிகாரிகள் வரை எதிர்பார்ப்போடு இருப்பதாகவும், அது கிடைக்கவில்லை என்னும்போது மக்கள் கோரிக்கை மீது அலட்சியம் காட்டி அலைகழிப்பு செய்து வருவதாகவும் பெரும்பாலானோர் கூறுகின்றனர்.

அதேபோல மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பு வகிக்கும் மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட துறை சார்ந்த மாவட்ட அலுவலர்கள் பொறுப்புணர்வு இல்லாமல் காலம் கடந்தால் போதுமென்று இருப்பதால் கீழ்மட்ட அலுவலர்களும் பொறுப்பற்ற முறையில் பணியாற்றுகின்றனர். மேலும் கூலித் தொழிலாளர்களை தற்கொலைக்கு தள்ளும் கந்துவட்டி (கொடுமை) வசூலிப்பவர்களை தடுக்க நடவடிக்கை இல்லை, ஆற்று மணல், கிராவல் மண், கருங்கற்கள், நிலத்தடி நீர் போன்ற இயற்கை வளங்களை சுரண்டி கொள்ளையடிப்பதை கண்டுகொள்வதில்லை, பிளாஸ்டிக் பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனை செய்யப்படுவதை தடுப்பதில்லை, கலப்பட உணவுப் பொருட்கள் காலாவதியான உணவு பொருட்கள், மருந்து பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை தடுக்க நடவடிக்கை இல்லை.

விவசாயிகள் வாங்கும் உரங்கள் பதுக்கல் செய்து கூடுதல் விலைக்கு விற்பதை தடுக்க அதிகாரிகள் எவரும் முன் வருவதில்லை, மேலும் பொதுப்பணித்துறை வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி துறை, அறநிலையத்துறை நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை மீட்க நடவடிக்கை இல்லை.

இந்த நிலையில் அரசு அலுவலகங்களை தேடிவரும் சாமானிய மக்களுக்கு காலவிரயம், பணவிரயம் செய்தும் எதுவும் நடக்கவில்லையே என மனவிரக்தி அடைந்துவிடுகின்றனர். சிலர் லஞ்ச ஒழிப்பு போலீசாரை நாடுகின்றனர். எனவே மக்களின் சட்டபூர்வமான கோரிக்கைகள் மீது எந்தவித நிபந்தனைகளும் இன்றி காலதாமதம் செய்யாமல், துரிதமாக நிறைவேற்றித் தர மக்கள் வரிப்பணத்தில் அரசு வழங்கியுள்ள சாதனங்களை பயன்படுத்தி பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட முன் வருவதற்கு போதிய அலுவலர்களை நியமிப்பதோடு, உடனடியாக அனைத்து துறை மாவட்ட அலுவலகங்கள் அமைத்திட தமிழக அரசும், துறை சார்ந்த மாநில உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

-கபில்தேவ், தொடர்புக்கு: 9894274211

## ஒன்றிய அரசைக் கண்டித்து

# தொழிற்சங்கங்கள் மறியல்






ஒன்றிய பாஜக மோடி அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை ரத்து செய்தல், தேசிய பணமாக்குதல் திட்டம் உள்ளிட்ட எந்தப் பெயராலும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தக் கூடாது, காண்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், பெட்ரோலியப் பொருட்கள் மீதான கலால் வரியைக் குறைத்து அனைத்து பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், மின்சாரத் திருத்தச் சட்டத்தை கைவிட வேண்டும், கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும்; ஏற்கனவே இயங்கி வருகிற மாநில தொழிலாளர் நலவாரியங்களை சீர்குலைக்க கூடாது, வருமானவரி கட்டுமளவுக்கு வருவாய் இல்லாத குடும்பங்களுக்கு மாதம் 7500/ ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும், பிராவிடண்ட் பண்ட் **(PF)** திட்ட குறைந்த பட்ச ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மார்ச் 28, 29ல் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.

**தருமபுரி:** தருமபுரி தலைமை தபால்நிலையம் முன்பு நடைபெற்ற மறியலுக்கு சிஐடியு மாவட்ட செயலாளர் சி.நாகராசன் தலைமை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் சின்னசாமி, ஏஐடியூசி மாவட்ட பொருளாளர் முருகன், மாவட்ட துணை செயலாளர் சுதர்சனம், ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் கந்தசாமி, எல்பிஎப் மாவட்ட தலைவர் சண்முகராஜா, ஏஐசிசிடியு மாவட்டசெயலாளர் சி.முருகன், எச்எம்எஸ் மாவட்டசெயலாளர் அருச்சுணன் ஐஎன்டியுசி மாவட்ட செயலாளர் லட்சுமணன் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

அரூர் ரவுண்டானா அருகில் நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு விவசாய தொழிலாளர் சங்க மாவட்டசெயலாளர் எம்.முத்து தலைமைவகித்தார்.ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் ஆர்.நடராஜன்,நிர்வாகிகள் தேவேந்திரன்,வேங்கன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டசெயலாளர் ஏ.குமார் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிசுபாலன் ஆகியோர் பங்கேற்று பேசினர். மறியலில் ஈடுபட்டோரை போலீசார் கைது செய்தனர்.

பாலக்கோடு தலைமை தபால்நிலையம் முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு சிஐடியு மாநிலக்குழு உறுப்பினர் சி.கலாவதி தலைமை வகித்தார். ஏஐடியூசி நிர்வாகிகள் மாதப்பன், சரவணன், சதீஸ்,ஜெயராமன், எல்பிஎப் நிர்வாகி யூவராஜ்,எச்எம்எஸ் நிர்வாகி முருகானந்தம் ஆகியோர் பேசினர். மறியலில் ஈடுபட்டோரை போலிசார் கைது செய்தனர்.

பென்னாகரத்தில் நடந்த மறியல் போராட்டத்திற்கு ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தலைமை வகித்தார். ஏஐடியூசி கட்டட சங்க நிர்வாகிகள் முனுசாமி,ஏ.சி.மணி மற்றும் சிஐடியூ,எல்பிஎப் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

**செங்கல்பட்டு** : செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏஐடியுசியுடன் இணைந்துள்ள கல்பாக்கம் அணுசக்தி ஊழியர் சங்கம், மறைமலைநகர் செக் பாயிண்ட், ஊரி, விர்கோ பாலிமர், யுகால் குரூப் ஐபெக்ஸ், எல்.எம். கம்பெனிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் 48 மணிநேர வேலைநிறுத்தத்தில் முழுமை யாக பங்கேற்று வேலைநிறுத்தம் செய்தார்கள். பல்லாவரம் பரங்கிமலை கண்டோன்மென்ட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து கறுப்பு அட்டை அணிந்து காலையில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.




செங்கல்பட்டு தலைமை தபால் நிலையம் முன்பிருந்து தொ.மு.ச., ஆர்.பொன்னுராம், ஏஐடியுசி கே, இரவி, தலைமையில் ஏஐடியுசி, எம். ஜஹாங்கீர், சிஐடியு கே.சேஷாத்திரி, தொ.மு.ச. எம்.சந்திரன், ஏஐசிசிடியு செ. இரணியப்பன் எல்டியுசி எம்.மோகன்ராஜ் முன்னிலையில் தொழிற் சங்கத்தினர் பேரணியாக ரயில் நிலையம் நோக்கி மறியல் செய்ய சென்ற போது பேருந்து நிலையம் முன்பு தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

சாலையை மறித்து அங்கே உட்கார்ந்து மறியல் செய்ததால் கைது செய்யப்பட்டார்கள்.

கல்பாக்கத்தில் ஏஐடியுசி, சிஐடியு தொழிற்சங்கத்தினருடன் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் இணைத்து ஏஐடியுசி வி.ஆதி மூலம் தலைமையில் சாலைமறியல் செய்தார்கள். அணு ஆற்றல் ஊழியர் சங்க நிர்வாகிகள் சின்ன கோவிந்தன், கருணாமூர்த்தி, மீனவ சங்க நிர்வாகி க. ஜெகதீசன். சிஐடியு நிர்வாகி பழனிசாமி மற்றும் தொழிலாளர்கள் பங்கேற்றார்கள்.

மதுராந்தகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கைதானார்கள்.

**மறைமலைநகர்:** மறைமலைநகர் பஜாரில் ஏஐடியுசி, சிஐடியு, ஏஐசிசிடியு ஆர்ப்பாட்டம்

கூடுவாஞ்சேரி பஸ் நிலையம் அருகில் அனைத்து தொழிற் சங்க ஆர்ப்பாட்டம்

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் 28, 29 தேதிகளில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

28 அன்று திண்டுக்கல் தபால் நிலையம் முன்பாக மறியல் நடைபெற்றது. மேலும் சின்னாளபட்டியில் சாலை மறியல் நடைபெற்றது.

29 அன்று நத்தம் பேருந்து நிலையம் முன்பாக பழனி பேருந்து நிலையம் முன்பாக தொப்பம்பட்டி தாளையம் பேருந்து நிலையம் முன்பாக மறியல் போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்பட்டது.

## பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு கட்டண உயர்வை கண்டித்து

# மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்

பாரதிதாசன் பல்கலைக்கழக மாணவர்களின் தேர்வுகட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் திருத்துறைப்பூண்டி அரசு கலைக் கல்லூரியில் வகுப்பு புறக்கணிப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில்நடப்பாண்டிற்கான மாணவர்களின் தேர்வு கட்டணத்தை உயர்த்தி பல்கலைக்கழகம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் சென்ற ஆண்டுகளை விட இந்த ஆண்டு தேர்வுக் கட்டணம் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இதனை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தியும், பழைய தேர்வு கட்டணத்தை அமல்படுத்திட வேண்டும் என வலியுறுத்தியும் கல்லூரியின் கிளை ஒருங்கிணைப்பாளர் இ.வளவன் தலைமையிலும் எஸ்.குணால் முன்னிலையிலும் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தின் கோரிக்கையினை விளக்கி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர்




ஜெ.பி.வீரபாண்டியன் பேசினார். இப்போராட்டத்தில் கல்லூரி நிர்வாகிகள் எம்.நவீன், எஸ்.மோகன், எம்.மணிபாரதி, கே.சரண், ஆர்.ராகவன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கோரிக்கைகளை வலியுறுத்தி மாணவ, மாணவிகள் முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 66. நல்லானைப் பாடலாம்

**நல்லானை நாளுந்தான் பாடலாம் நல்லானாய்**
**நாட்டில் நடத்தலை நாடு.**

நாம் நல்ல மனிதர்களைப் புகழ்ந்து பாடலாம். அடிக்கடி புகழலாம். நாமும் நாட்டினர் பாராட்டும் வண்ணம், நல்லவர்களாய் நடந்து காட்ட வேண்டும்.

**நலத்தை நவில்தலில் இல்லை நலம்தன்**
**நடப்பில் நடத்தல் நலம்.**

நாம் நல்ல செய்திகளை எடுத்துச் சொல் பவர்களாக இருந்தால் மட்டும் போதாது. நல்லவர் களாய் நடந்து காட்ட வேண்டும்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

“நீங்கள் அபாயகரமான வழியில் செல்வது மட்டுமல்ல, உங்களை பின்பற்றுபவர்களும் அபாயகரமான பாதையை பின்பற்றுகிறார்கள் என்று பா.ஜ.க.பற்றி மிகத் தெளிவாக இடித்து உரைத்துள்ளார் அமர்ஜித்கவுர்.

**– பி.கிருஷ்ணன்,**
பாளையங்கோட்டை

**ஆசிரியர் ஜனசக்தி,**

கல்வியை கடைச்சரக்காக்கும் தன்னாட்சி கல்லூரிகள் என்ற தலைப்பிலான கட்டுரை தேவையான, அவசியமான கட்டுரை. ஆனால் படிப்பதற்கு இன்னும் எளிமையாக இருக்க வேண்டும். நமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், எம்.செல்வராசு ஆகியோரின் நாடாளுமன்ற உரைகள் மிகச் சிறப்பானது.

**– செல்லபாண்டியன்,**
காளையார்கோவில்

**ஆசிரியர் ஜனசக்தி,**

மார்க்சியத்தில் எவை எவை யெல்லாம் திணிக்கப்படுகிறது என்பது பற்றியும், மேலைய மார்க்சியம் செவ்வியல் மார்க்சியம் ஆகாது என்றும், மேலைய மார்க்சியர்கள் மார்க்சியத்தின் அடிப்படையை மாற்ற முயல்கின்றனர் என்றும், மார்க்சிய அறிஞர் தோதாத்ரி மேலைய மார்க்சியர்களின் முக மூடியை கிழக்கிறார்.

**–க.அன்பழகன்**,சைதாப்பேட்டை

**ஆசிரியர் ஜனசக்தி,**

பிறமாநிலச் செய்திகள், கேள்வி பதில், விளையாட்டு போன்ற பகுதிகள் ஜனசக்தியில் இடம்பெற வேண்டும். கலை இலக்கியப் பூங்கா வாரம்தோறும் வெளிவர முயற்சிக்க வேண்டும். கட்டுரைகள் நடப்பு செய்திகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**– அருள்சேகரன்,**
சங்கராபுரம்

## பாப்பநாயக்கன்பாளையம் கிளை மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாப்பநாயக்கன் பாளையம் கிளை மாநாடு காட்டூர் ரோட்டில் உள்ள ஜீவா மன்றத்தில், குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.சுதர்சன், கட்சியின் மத்திய மண்டலக்குழு செயலாளர் கே.ரவீந்திரன் ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டில் ரங்கநாதன் செயலாளராகவும், ஜெயபால் துணை செயலாளராகவும், மதனகோபால் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

## பட்டுக்கோட்டையில் இருந்து தஞ்சை வழியாக அரியலூர் வரை ரயில்பாதை அமைத்திடுக

### ஒரத்தநாடு ஒன்றிய சிபிஐ மாநாடு தீர்மானம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரத்தநாடு ஒன்றிய 25வது மாநாடு ஒரத்தநாட்டில், எஸ்.ஏ.முருகையன் நினைவரங்கில் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அ.பன்னீர்செல்வம், தி.திருநாவுக்கரசு, கா.முருகையன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.. மூத்ததோழர் அ.வைத்திலிங்கம் கொடியேற்றினார்.

தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். ஒன்றிய செயலாளர் சீனி.முருகையன் வேலை அறிக்கை சமர்பித்து பேசினார். எஸ்.ஏ.எம். கோசிமின் அமைப்பு நிலை அறிக்கை சமர்பித்து பேசினார். ஒன்றிய பொருளாளர் த.கிருஷ்ணன் வரவு செலவு கணக்கு சமர்பித்தார்.

மாநாட்டில் மாவட்ட துணைச்செயலாளர் வீ.கல்யாணசுந்தரம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கோ.சக்திவேல், மதுக்கூர் ஒன்றிய செயலாளர் பாரதிமோகன், ஒன்றிய நிர்வாகிகள் மா.பாலு, சோ. பாஸ்கர், து.அ.சேகர் ஆகியோர் பேசினார்.

ஒன்றிய செயலாளராக வாசு. இளையராஜா, துணைச் செயலாளராக எஸ்.ஏ.எம். கோசிமின், பொருளாளராக த.கிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பட்டுக்கோட்டையில் இருந்து தஞ்சைக்கு செல்லும் மாணவர்கள், அரசு பணியாளர்கள், பொதுமக்கள் மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். அதனால், பட்டுக்கோட்டையில் இருந்து தஞ்சை வழியாக அரியலூர் வரை ரயில்பாதை அமைக்க மத்திய அரசு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து பணியை துவங்க வேண்டும்.

கோடை துவங்கிவிட்ட நிலையில் மும்முனை மின்சாரம் தடை ஏற்பட்டுள்ளது. எனவே கோடை விவசாயத்தை பாதுகாப்பதற்கு தடையில்லா மும்முனை மின்சாரத்தை முறைப்படுத்தி விவசாயிகள் பாதிக்காமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரத்தநாடு கடைத்தெருவில் பொது கழிப்பிட வசதி இல்லை. எனவே ஒரத்தநாடு பேரூராட்சி நிர்வாகம் கடைத்தெருவில் கழிப்பிட வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நாகர்கோவிலில் தட்டுப்பாடின்றி

## குடிநீர் கிடைத்திட நடவடிக்கை எடுத்திடுக!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகர்கோவில் மாநகரக் கிளை கூட்டம் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகர பொருளாளர் கே. நாகராஜன், மாநகர இணைச்செயலாளர் ஜி. ஐயப்பன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் தா. சுபாஷ் சந்திர போஸ், செந்தில் குமார், கல்யாணசுந்தரம், சிங், அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநிலத்துணைத்தலைவர் பேராசிரியர் சுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அப்போது, கோடைகாலத்தில் மாநகரத்தின் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், மாநகர தெருக்களில் ஹாலோபிளாக்குகளை முறையாக பதித்து சீர்படுத்தவும், அண்ணா பேருந்து நிலையத்தின் பெயர் பலகையை மீண்டும் அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநகர இணைச்செயலாளர் ஜி.ஐயப்பன் நன்றி கூறினார்.

## வீடற்ற ஏழைகளுக்கு இலவச மனை வழங்கிடுக

### ஊத்துக்குளி சிபிஐ மாநாடு தீர்மானம்



திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 27 வது மாநாடு ஊத்துக்குளி காயத்ரி ஹோட்டலில் நடைபெற்றது. மாநாட்டை வழிநடத்த ஊராட்சி தலைவர் பி.எஸ். செல்வி பேரூராட்சி துனைத்தலைவர் வி.ஏ.சரவணன் மற்றும் கே.ஈஸ்வரன் ஆகியோர் தலைமைக் குழுவாக இருந்து செயல்பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் கே.சுப்பிரமணி மாநாட்டுக் கொடி ஏற்றி வைத்தார்.

எஸ்.பி.பாலசுப்பிரமணி வரவேற்புரையாற்றினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எம்.ரவி மாநாட்டை தொடக்கி வைத்து பேசினார். மாநாட்டில் விதொச மாவட்ட செயலாளர் வி.பி.பழனிசாமி, தாலுகா செயலாளர் வி.கே.முத்துச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வி.ஏ.சரவணன் தாலுகா செயலாளராகவும், ஜி.கே.கேசவன் ஏ.ஈஸ்வரன் தாலுகா துணைச் செயலாளர்களாகவும், ஏ.ஈஸ்வரன் தாலுகா பொருளாளராகவும் தேர்வு செய்யப் பட்டனர்.

ஊத்துக்குளி தாலுக்கா அ.பெரியபாளையம், ச.பெரியபாளையம், மொரட்டுப் பாளையம், விருமாண்டம் பாளையம், ஊத்துக்குளி பேரூராட்சி, அனைப்பாளையம், கவுண்டம் பாளையம், புஞ்சை தளவாய்பாளையம் கிராமங்களில் உள்ள சிற்றூர்களில் வாடகை வீடுகளில் ஒரே வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்கள் திருமணமாகி ஒரே வீட்டில் குடியிருந்து வரும் குடும்பங்கள், சாலை, ஓடைபுறம்போக்குகளிலும் அதே போல் வெங்கலப்பாளையம், புதுப்பாளையம் மக்கள் என 250க்கும் மேற்பட்டவிண்ணப்பங்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு வருவாய் துறையிடம் வழங்கப்பட்டது. இது தொடர்பாக தொடர்ந்து ஊத்துக்குளி வட்டாட்சியர் அவர்களிடம் நேரடியாக முறையிட்டும் பல்வேறு வகையான போராட்டங்கள் நடத்தப்பட்டது. பின்பு ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் நில எடுப்பு துறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆதிதிராவிடர் நலம் நில எடுப்பு துறை தாசில்தார் அவர்கள் போர் கால நடவடிக்கைஎடுத்து வீடற்ற ஏழைகளுக்கு இலவசமனை நிலம் வழங்க மாவட்ட நிர்வாகமும், ஆதி திராவிடர் நலத்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊத்துக்குளி தாலுக்கா மாநாடு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

ஊத்துக்குளி தாலுக்கா பகுதியில் தென்னை விவசாயிகள் அதிகம் உள்ளதால் இங்கு தேங்காய் விற்பனைக்காக பல இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது அதன் காரணமாக அரசாங்கம் கொப்பரை கொள்முதல் நிலையம் ஒன்று ஊத்துக்குளியில் அமைத்து தரவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

### புஞ்சைப்புளியம்பட்டியில்

## விளையாட்டரங்கம் அமைத்துத் தருக!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர மாநாடு தீர்மானம்!

“புஞ்சைப்புளியம்பட்டியில் உள்ள அரசு பள்ளி மாணவமாணவியர் தொடர்ந்து பல ஆண்டுகளாகவே ஹாக்கி விளையாட்டில் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகின்றனர். நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே இளைஞர்கள், கைப்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளுக்கு தனி அமைப்பினை ஏற்படுத்தி போட்டிகளை நடத்தியும் வருகின்றனர்.

புஞ்சைப் புளியம்பட்டி மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் ஹாக்கி விளையாட்டில் மாநில மற்றும் தேசிய அளவில் பல சாதனைகளை புரிந்து வருகின்றனர்.

பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளிலும், தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் தமிழ்நாட்டு அணிக்காகவும் இப்பள்ளியில் பயின்ற மாணவிகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

புஞ்சைப்புளியம்பட்டி மகளிர் பள்ளி மாணவிகளின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் மற்றும் அங்கீகரிக்கும் வகையில் விளையாட்டரங்கை புஞ்சைப் புளியம் பட்டியில் அமைத்திட வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகர மாநாடு கோருகிறது.”

வன விலங்குகளால் தாக்குதலுக்கு ஆளாகி உயிரிழந்தோருக்கு உரிய நிவாரணம் வழக்குக !

வனப்பகுதியில் கால்நடைகளை மேய்ப்பது,சிறு வன மகசூலை சேகரிப்பது,வனத்திற்குள் உள்ள கோயில்களில் வழிபாடு செய்வது போன்ற நடவடிக்கைகள் காலங்காலமாக பழங்குடிகளும்,இதர வனம்சார்ந்து வாழும் மக்களும் மேற்கொண்டு வருபவையாகும். இவை, இம்மக்களின் பாரம்பரிய உரிமை.. இவ்வுரிமைகளை வன உரிமைச்சட்டம் அங்கீகரிக்கிறது.

ஆனால், இந்நடவடிக்கைகளின் போது வன விலங்குகளால் தாக்குதலுக்காளாகி மக்கள் உயிரிழந்தால் வனத்துறை நிவாரணம் கொடுக்க மறுக்கிறது. அரசு சட்டபூர்வமாக அங்கீகரித்த நடவடிக்கைகளை வனத் துறை சட்ட விரோதமாக்குகிறது.

சத்தியமங்கலம் டிஎப்ஓ விடம் இவ்வாறு பாதிக்கப்பட்ட நான்கு குடும்பத்தினர் நிவாரணம் கோரும் மனுவினை அளித்து, நிவாரணம் கிடைக்கும்வரை காத்திருப்பது என முடிவு செய்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம்,பழங்குடி மக்கள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஜீவபாரதி,சங்க சட்ட ஆலோசகர் செ.செயராசு ஆகியோர் மாவட்ட வன அலுவலரிடம் பேசியதன் அடிப் படையில் ,அவரிடம் கோரிக்கை மனுவினை அளித்தனர்.

### பவானி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர்

## வி.என்.பொன்னுசாமி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



பவானி ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் வி.என். பொன்னுசாமி (98) மார்ச் 30 அன்று, பவானி ஒன்றியம், வளையக்காரன் பாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நல்ல வசதியான விவசாயக் குடும்பத்தில் பிறந்த திரு.வி.என். பொன்னுசாமி காங்கிரஸ் பேரியக்கத்தில் பற்றுக் கொண்ட தேசபக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர்.

அடித்தட்டு மக்களின் மேம்பாட்டு பணிக்காக தன்னை அர்பணித்துக் கொண்டவர். மக்களின் நன்மதிப்பைப் பெற்று, பெரிய புலியூர் ஊராட்சியின் தலைவராக தொடர்ந்து

15 ஆண்டுகள் பணியாற்றியவர். பவானி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றினார்.

சமூக செயல்பாட்டாளரும், இந் தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினருமான வி.பி.குணசேகரன், சக்தி சுகர்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற வி.பி.மயில்ராஜ் ஆகியோர் வி.என். பொன்னுசாமியின் மகன்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாதங்களாக உடல்நலிவு காரணமாக சிகிச்சை பெற்று வந்தவர். வீட்டில் கீழே தவறி விழுந்ததில் மேலும் பாதிக்கப்பட்டு வேதனைப்பட்டு வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

தேசிய உணர்வாளர் வி.என். பொன்னுசாமி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.




மினி கிளினிக் பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கு

# பணிப் பாதுகாப்பு வழங்கிடக் கோரி ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு மினி கிளி னிக் பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கிடக் கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மினி கிளினிக்குகளுக்காக பல்நோக்குப் மருத்துவமனைப் பணியாளர்கள் 1400 க்கும் மேற்பட்டோர் சென்ற ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு மாதம் வெறும் ரூ.6000 மட்டுமே தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது.

அவர்களை தற்பொழுது பணி நீக்கம் செய்ய தமிழ்நாடு அரசு முயல்கிறது. இது மிகுந்த வருத்தத்தை தருகிறது. அவர்களை பணி நீக்கம் செய்யக் கூடாது. பணி நீக்க உத்திரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.


அவர்களுக்கு பணி நீட்டிப்பு மற்றும் பணிப் பாதுகாப்பு வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் தலைமை தாங்கினார்.

மினி கிளினிக் பல்நோக்குப் மருத்துவமனைப் பணியாளர்கள் நலச் சங்கத்தின் தலைவர்கள் மு.சாந்தி, பெ.ராதிகா, க.சீத்தா லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசுப் பணியாளர் சங்கத்தின் சார்பில் முன்னாள் மாநில பிர சார செயலாளர் எஸ்.சிவகுரு ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, கூட்டமைப்பின் தலைவர் பி. காளிதாசன், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் மாநில துணைத்தலைவர் எஸ்.தனவந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மினி கிளினிக் பல்நோக்குப் மருத் துவமனைப் பணியாளர்கள் நலச் சங்கத்தின் நிர்வாகிகள் அ.ராஜசேகர், மு.மணிகண்டன், ந.வாசுதேவன் கோரிக்கை விளக்க உரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 700 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட குழு உறுப்பினர் கே.கனகராஜு – கெங்காதேவி ஆகியோரின் புதல்வன் செல்வன் அருண்குமாருக்கும் – செல்வி மோகனப்பிரியாவிற்கும் திருமணம் நடைபெற்றது. திருமண நிகழ்ச்சியில் தமிழ்நாடு விவசாய சங்க மாநிலக்குழு உறுப்பினர் லெனின் அவர்களிடம் ஜனசக்தி நிதியாக ரூ.1700 வழங்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர் வ.பாலமுருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மலை மகளிருக்கு மலைப்பகுதிப் பேருந்துகளில்

# இலவச பயணத்திற்கு அனுமதிக்க வேண்டும்!



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடம்பூர் மலை வட்டார ஆறாவது மாநாடு பூதிக்காட்டில் நடைபெற்றது.

மாநாட்டு தலைமைக்குழுவாக எஸ்.பார்த்திபன், பி.மகேஸ், பி.ராஜேந்திரன் ஆகியோர் வழிநடத்தினர். மாவட்டச் செயலாளர் டி.ஏ. மாதேஸ்வரன், மாநாட்டு கொடியினை ஏற்றிவைத்துப் பேசினார். மாவட்ட துணைச்செயலாளர் ஜி.வெங்கடாசலம் ,மாநாட்டை துவக்கி வைத்துப் பேசினார்.

கடம்பூர் மலைவட்டார செயலாளராக, பவளக்குட்டை பி.மகேஸ், துணைச் செயலாளர்களாக கிட்டாம்பாளையம் பி.மோகன்ராஜ், நகலூர் ஜே.குமார், பொருளாளராக கரளையம் கே.தினேஷ்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பழங்குடி மக்கள் சங்கத்தின் சட்ட ஆலோசகர் செ.செயராசு,கட்சியின் பொதுக்குழு உறுப்பினர் எஸ். மோகன்குமார் ஆகியோர் புதிய நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினர்.

மாநாட்டில் பின் வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

"மலை மகளிர்க்கு மலைப்பகுதிப் பேருந்துகளில் இலவச பயணத்திற்கு அனுமதிக்க வேண்டும் !"

தமிழக முதலமைச்சர் நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணத்திற்கு அனும தியளித்து உத்திரவிட்டார். இந்த அறிவிப்பு பெண்களுக்கு பேருதவியாய் உள்ளது. தமிழகத்தின் மலைப்பகுதிகளில் பெரும்பாலும் நகரப்பேருந்துகள் இல்லை.

சமவெளிப்பகுதியில் இயக்கப்படும் நகரப்பேருந்துகளில் கட்டணமில்லாமல் பெண்கள் பயணம் செய்யும் வாய்ப்பை பெற்றிருக்கும் போது,மலைப்பகுதி பெண்கள் மட்டும் நகரப்பேருந்துகள் இயக்கப்படாததால்,அந்த வாய்ப்பை பெற இயலாமல் இருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் அவர்கள் இந்த வாய்ப்பை மலைப்பகுதி பெண்களுக்கும் அளிக்க முன்வரவேண்டும்.

அம்மாப்பேட்டை

# ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அம்மாபேட்டை ஒன்றிய 7வது மாநாடு அம்மாபேட்டையில் நடைபெற்றது . மாநாட்டு கொடியினை ராஜாராமன் ஏற்றி வைத்தார்.மாநாட்டினை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.பத்மாவதி துவக்கி வைத்து பேசினார். ஒன்றிய துணைச் செயலாளர் குருமூர்த்தி வரவேற்றார்.

தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் பாரதி, ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் தில்லைவனம் வாழ்த்தினர். ஒன்றிய துணைச் செயலாளர் குருமூர்த்தி நன்றி கூறினார்.


ஒன்றியச் செயலாளராக செந்தில்குமார் தேர்வு செய்யப்பட்டார்.

அம்மாபேட்டையை தலைமையிடமாக கொண்டு தனி தாலுக்கா உருவாக்க வேண்டும், அம்மாபேட்டையில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைக்க வேண்டும் ,அம்மாபேட்டையில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க வேண்டும் ,அம்மாபேட்டை பிர்காவில் சர்வேயரை நியமனம் செய்ய வேண்டும் ,அம்மாபேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேறின.

ரயில்வே வாரிய தலைவருடன்

நாகை நாடாளுமன்ற உறுப்பினர்

# எம்.செல்வராசு சந்திப்பு



ரயில்வே வாரிய தலைவர் வி.கே திருபாதியை நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் நேரில் சந்தித்து ரயில் சார்ந்த கோரிக் கைகளை அளித்து உடனே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

கோரிக்கைகள் விபரம்

திருவாரூர் காரைக்குடி மார்க்கத்தில் கேட் கீப்பர்களை நியமித்து இரவு நேரத்தில் சென்னைக்கு விரைவு ரயில்கள் இயக்கப்பட வேண்டும்.

மீட்டர்கேஜ் காலத்தில் இயங்கிய காரைக்குடி – திருவாரூர் – சென்னை விரைவு ரயிலை மீண்டும் இயக்கிட வேண்டும்

நிலுவையிலுள்ள தாம்பரம் – திருவாரூர் – செங்கோட்டை வாரம் மும்முறை அதி விரைவு ரயிலை உடனே இயக்கிட வேண்டும்

நாகூரில் இருந்து அஜ்மீருக்கு முஸ்லிம் மக்களின் நலனைக் கருதி வாராந்திர விரைவு ரயில் இயக்க வேண்டும்

நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை யில் பொது மக்களுடைய நலனையும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மேம்பாலம் அமைத்திட வேண்டும்


நாகூர் பட்டினச்சேரி சாலையில் உள்ள கீழ் பாலம் மழைக்காலத்தில் போக்குவரத்திற்கு இடையூறாகவும் மக்களின் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் உள்ளது. அதை உடன் செப்பனிட்டு சீர் செய்திட வேண்டும்.

திருத்துறைபூண்டி அகஸ்தியம்பள்ளி மார்க்கத்தில் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும். சந்தை தோப்பு நெய்விளக்கு ஆறுகாட்டுத்துறை குரவப்புலம் ராமகிருஷ்ணாபுரம் கொல்லி தீவு பகுதிகளில் கேட் பாலம் அமைத்திட முன்னாள் கைத்தறித் துறை அமைச்சர் முன்னிலையில் ரயில்வே உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் என்னால் முன்மொழியப்பட்டு ரயில்வே நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விபரங்களை உடனடியாக கட்டி முடித்து தர வேண்டும்

தஞ்சை நாகப்பட்டினம் மார்க்கத்தில் கொரடாச்சேரி, கீவளூர் திருவாரூர் மயிலாடுதுறை மார்க்கத்தில் பேரளம் ஆகிய ஊர்களுக்கு அனைத்து ரயில்களுக்கும் நிறுத்தம் வேண்டும். இவை அனைத்தும் கோரிக்கை மனுவாக கொடுக்கப்பட்டுள்ளது.

# தமிழக விவசாய இயக்கத்தின் வீர வரலாறு

தமிழக விவசாயிகளின் உரிமைகளுக்காக, நீண்ட பல போராட்டங்களை முன்னெடுத்த பெருமை தமிழக விவசாய இயக்கத்திற்கு உண்டு. ஜமீன்தார், ஜாகிர்தார், மிட்டாதார், மிராசுதார், பட்டாதார் என நிலவுடைமையாளர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த விவசாயிகளை தட்டி எழுப்பிய பெருமை தமிழ்நாடு விவசாய இயக்கத்திற்கு உண்டு. சொத்துடமை உருவான நாள் முதல் உழுதுப் பயிரிட்டு விளைவிக்கின்ற விவசாயிகளுக்கும் – உடமையாளர்களுக்கும் இடையிலான போராட்டம் தொடங்கிவிட்டது. ஆயிரம் ஆண்டுகளாக அடிமைச் சமூகத்திலும், நிலமானிய சமூகத்திலும் போராடி மாற்றியமைக்கும் சக்தி கொண்ட உழைக்கும் வர்க்கம், புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி வெற்றி கண்டே வந்துள்ளது. 1942இல் தமிழ்நாட்டில் விவசாய சங்கம் உருவாக ஆரம்பித்தது. பா. ஜீவானந்தம், பி. சீனிவாசராவ் இதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டனர். விவசாய இயக்கத்தின் அஸ்திவாரம் ஒன்றுபட்ட தஞ்சையிலுள்ள தென்பரை கிராமம் ஆகும். அங்கு எழுந்த சிறு தீப்பொறி தான் பிரம்மாண்டமாக வளர்ந்து தஞ்சை மாவட்ட நிலப்பரப்புகளை ஒழித்துக் கட்டியது.




நிலச் சீர்த்திருத்தங்களை வலிமையாக கோரியது "முற்போக்கான நிலசீர்திருத்த சட்டங்களை இயற்றும் போது திறமையாக அமுலாக்கம் போதும் உறுதியான அரசியல் தீர்மானங்களும், தீவிரமான அரசியல் ஆதரவும், வழிகாட்டல்களும், கட்டுப்பாடும் தேவைப்படுகின்றன. நாட்டின் கிராமப்புறங்களில் இருக்கும் சமுதாய, பொருளாதார அமைப்பு சூழலில் போதுமான அரசியல் உரிமையுடன் கூடிய நடவடிக்கை இல்லாமல் நிலச்சீர்திருத்தம் எதிர்பார்த்த அளவு முன்னேற்றத்தை அடைய முடியாது. தமிழக விவசாய இயக்கத்தின் மிக முக்கிய ஆளுமைகளாக இருந்தவர்கள் பி. சீனிவாசராவ், ப. ஜீவானந்தம், இரா.நல்லகண்ணு மணலி கந்தசாமி, எம்.ஆதிமூலம், வே.துரைமாணிக்கம், மற்றும் மணலூர் மணியம்மை, களப்பால் குப்பு, வாட்டாக்குடி இரணியன், சம்பவான் ஓடை சிவராமன், அம்பலப்பட்டு ஆறுமுகம் போன்றோர் சிந்திய குருதியாலும் , உழைப்பாலும் தமிழக விவசாய இயக்கம் வீறுகொண்டு எழுந்தது. உரிமைகளுக்கான பல போர்க்களங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. பல உரிமைகள் வென்றெடுக்கப் பட்டன

தமிழக விவசாய இயக்கத்தின் வரலாற்றை மிக விரிவாக அதன் நேரடி சாட்சியமாக வாழ்ந்து வரும் தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களும், தோழர் கணபதி இளங்கோ அவர்களும் இணைந்து 'தமிழக விவசாய இயக்கத்தின் வீரவரலாறு' என்ற இந்நூலை எழுதி இருக்கின்றனர். தமிழக விவசாய இயக்க வரலாற்றை அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் அனைவரும் இந்நூலை வாங்கிப் படிக்க வேண்டும்.

– இன்சுவை பாரதி

**நூலாசிரியர் : ஆர். நல்லக்கண்ணு, கணபதி இளங்கோ**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16 ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை14, போன் :04428482441**
**பக்கங்கள் : 194 விலை : ரூ.185**

## நூல் நயம்

# சென்னை ஐஐடியில் பற்றி எரியும் சாதி தீ

கல்வி சிறந்த தமிழ்நாடு,புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்பார் பாரதி. அந்த தமிழ்நாட்டிலும் சாதி தீ எவ்வளவு கொடூரமாக ஒடுக்கப்பட்ட மக்களை தீய்த்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டு விஞ்ஞான யுகத்திலும், சாதி எனும் சாக்கடையை மண்டையில் நிரப்பிக் கொண்ட ஒரு கூட்டம் கல்வி நிலையங்களையும் கொலைக்களமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. வட நாடு மட்டுமின்றி தென் நாடும் இதற்கு பலியாகி கொண்டிருப்பதுதான் பெரும் சோகம். இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சியை கருத்தில் கொண்டு 1956–இல் இந்தியா முழுவதும் இருபத்தி மூன்று நகரங்களில் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இதில் ஒன்றுதான் சென்னை ஐஐடி. ஒன்றிய அரசின் ஆட்சி நிர்வாகத்திற்கு தேவையான திட்டங்களையும், பணிகளையும் வரையறுத்து தரும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக இவை இயங்கும் என பிரகடனப்படுத்தப்பட்டது.




பல திறமை மிகுந்த தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்கள் சொல்லுனா கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். "அதிகாரத்தில் இருக்கும் நபர்கள் சாதி மத இன பாகுபாட்டை கடைப்பிடிக்கும் போது மட்டும் தங்கள் அரசியல் உணர்வுகள், பாலினம் ஆகியவற்றை கடந்து வன்மத்துடன் செயல்படுகிறார்கள்" என தனது பணியை ராஜினாமா செய்த உதவிப்பேராசிரியர் விபின் குற்றம் சாட்டுகிறார். மேலும் ஐஐடியில் பணியாற்றும் ஒவ்வொருவரும் தாங்கள் அனுபவிக்கும் சாதி, மத, இன அடிப்படையிலான வன்மம் குறித்து உரிய முறையில் புகார் தெரிவித்து வெளி உலகத்திற்கு கொண்டு வர வேண்டுமென சக ஊழியர்களை கேட்டுக்கொள்கிறார் விபின். இவர் எவ்வளவு வலிகளை தாங்கி பணி செய்திருப்பார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

எனவேதான் சென்னை ஐஐடியில் நடைபெறும் சாதிய கொடுமைகளை தோலுரிக்கும் வகையில் "சென்னை ஐஐடியில் பற்றி எரியும் சாதி தீ" எனும் இந்த நூலை வழக்கறிஞர் கீ.சு.குமார் அவர்கள் எழுதி இருக்கிறார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– சமரன்

**நூலாசிரியர் : கீ. சு.குமார்**
**வெளியீடு : தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், 14, செவாலியே சிவாஜி கணேசன் சாலை, தியாகராயநகர், சென்னை – 17 பக்கங்கள் : 32 நன்கொடை: ரூ.20**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## உக்ரைன் போர்



# உக்ரைன் அரசியல் களத்தில் நவீன தாராளமயம்

அரசியலும் பொருளாதாரமும் பிரிக்க முடியாதவை எனும் மார்க்சிய அடிப்படையை சமகாலத்து உக்ரைன் நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுப் போக்குகள் மீண்டும் நிரூபணம் செய்கின்றன.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ கலகத்தால் அப்போதைய அதிபர் யானுகோவிச் ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்றப்பட்டதன் நேரடி விளைவாகவே செலன்ஸ்கி உக்ரைனின் அதிபராகப் பொறுப்பேற்றார். பிரேசிலில் அதிபர் தில்மா ரூசெப் க்கு எதிரான ராணுவ கலகத்திற்கு பின் போல்சோனாரோ தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த இரண்டு நிகழ்வுகளும் எதேச்சையாக நடந்தவையன்று. இவற்றின் பின்புலத்தில் தீவிர வலதுசாரி குழுக்களும், நவீன நாஜிக்களும் இருந்தனர். மக்களிடையே குழப்பங்களை உண்டாக்குவது, பொய் பிரச்சாரங்கள் மேற்கொள்வது ஆகியவற்றை மிகவும் திறம்பட மேற்கொண்டனர்.

அதிபர் யானுகோவிச் ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்றப்பட்ட பின் உக்ரைன் நாட்டுக்குள் மான்சாண்டோ போன்ற நிறுவனங்கள் நுழைந்தது தற்செயலான நிகழ்வன்று. 2012 ஆம் ஆண்டு பராகுவே நாட்டில் நாடாளுமன்ற குழப்பங்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலமாக அதிபர் பெர்னாண்டோ லுகோ ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட அத்தியாயத்திலும் மான்சாண்டோ நிறுவனம் ஈடுபட்டிருந்தது.

பிரேசில் நாட்டில் நிகழ்ந்த இராணுவ கலகத்திற்கு பிறகு, தனியார்மயம் மற்றும் அந்நாட்டின் எண்ணெய் வளங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் கபளீகரம் செய்வதற்கான கதவுகள் திறந்து விடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். நவீன தாராளமயம் எனும் அரசியல் நகர்வில் ஷெல், மான்சாண்டோ போன்ற பெருநிறுவனங்களும் தீவிர வலதுசாரி குழுக்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இருந்தன.

அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதாக இருக்கும் பட்சத்தில், அரசை ஆதரிப்பதும், அதிகாரத்தையும், செல்வ வளங்களையும் பகிர்மானம் செய்ய முயன்றாலோ, பொது கல்வி மற்றும் பொது சுகாதாரத்துறைகளை நிறுவிட முயலும் பட்சத்தில் அரசை எதிர்ப்பதும் நவீன தாராளமயத்தின் சாரம் ஆகும்.

தனியார்மய செயல்திட்டத்தைத் திணிக்க வேண்டுமென்றால், முதலில் சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் சட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்கு முறைகள், பொதுக் கல்வி மற்றும் சுகாதார கட்ட மைப்புகள் ஆகியவை தகர்க்கப்பட வேண்டும். இதனை சாத்தியப்படுத்த வேண்டும் என்றால் சமுதாயத்தில் தற்போது ரகசியமாக இயங்கி வரும் பாசிஸ்டுகள் மற்றும் மிகவும் பிற்போக்குத்தனமான சக்திகளின் ஆதரவை நவீன தாராளமயம் திரட்ட வேண்டும்.

தெளிவுறச் சொல்வதானால், பாசிசம் என்பது இராணுவ உடை அணிந்துள்ள நவீன தாராளமயம் அல்லது நவீன தாராளமயம் என்பது சாதாரண உடை அணிந்துள்ள பாசிசம் ஆகும்.

# உக்ரைன் போர்: செலன்ஸ்கியின் வேண்டுகோளும் அமெரிக்க உதவியும்

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே நடைபெற்று வரும் இராணுவ மோதல் ஒரு மாதத்திற்கு மேலாக தொடர்கிறது. ரஷ்யப் படைகள் மரியுபோல் துறைமுக நகரத்தைச் சுற்றி வளைத்துள்ள நிலையில் அங்கு மோதல் மேலும் தீவிரமாகி உள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடந்து வரும் இந்தச் சூழலில் மேற்குலக நாடுகளிடம் மேலும் அதிகப்படியான இராணுவ உதவிகளைக் கோரி வேண்டுகோள் விடுத்துள்ளார். எங்களுக்கு ஏவுகணைகளைத் தாருங்கள். உங்களின் தி18 அல்லது தி19 போர் விமானங்களை நீங்கள் தர இயலாது. எனினும் பழைய சோவியத் மாடல் விமானங்களைத் தாருங்கள் என்று அவர் பேசியுள்ள செய்தியும் வெளியாகியுள்ளது. "மவுனத்தைத் தவிர வேறு எதைக் கொண்டும் எங்களை ஆதரியுங்கள்" என்று செலன்ஸ்கி உருக்கமாகப் பேசியுள்ளார்.

உக்ரைனின் ராணுவ கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக 'பாதுகாப்பு நிதி உதவி' எனும் பெயரில் 300 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகன் தெரிவித்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் தொடுத்த பிப்ரவரி மாதத்தில் இருந்து, இதுவரையில் 1.6 பில்லியன் டாலர் அளவிற்கு அமெரிக்கா உதவி செய்து இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

# கோத்தபய ராஜபக்சே பதவி விலக கோரி போராட்டம்

கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு இலங்கை பெரிய அளவில் பொருளாதார பாதிப்பை சந்தித்து வருகிறது. இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அந்நியச் செலாவணி வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நாணயம் பெரிய அளவில் மதிப்பிழந்துவிட்டது. இதனால் கடுமையான எரிபொருள் பற்றாக்குறை நிலவுகிறது. நிலக்கரி வாங்க பணம் இல்லாததால் இலங்கையில் தினமும் 12 மணி நேரம் வரை மின்வெட்டு அமலில் உள்ளது.

பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது.

சுருக்கமாகச் சொல்வதென்றால், இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அந்நியச் செலாவணி தட்டுப்பாடு சிக்கலில் சிக்கியுள்ளது. உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் கடந்த வெள்ளிக்கிழமை (01.04.2022) இரவு அவசரநிலை பிறப்பிக்கப்பட்டது.

மக்கள் போராட்டம் தீவிரமானதால் 26 அமைச்சர்களும் ராஜினாமா செய்தனர். அவர்களின் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டுள்ள அதிபர் கோத்தபய ராஜபக்சே, எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இலங்கையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்த தேசிய அரசை அமைக்க விரும்புவதாகவும், அமைச்சரவை பொறுப்புகளை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்சேவுக்கு எதிராக, அமெரிக்கா, லண்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வாழும் இலங்கை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"கோத்தபய ராஜபக்சே பதவி விலக்க வேண்டும்" என்ற பதாகைகளுடன் இளைஞர்கள், இளம்பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையின் முக்கிய பல்கலைக்கழகங்களிலும் கோத்தபய ராஜபக்சே பதவி விலக வேண்டி தொடர் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நெருக்கடியான சூழலில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு இந்தியா 40,000 டன்கள் டீசல் வழங்கியுள்ளது. அரிசி, மருந்துப் பொருட்களையும் வழங்க ஒப்பந்தம் செய்துள்ளது. 40 ஆயிரம் டன்கள் அரிசியையும் அனுப்ப இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த மாதம் இரு நாடுகளும் 1 பில்லியன் டாலர்கள் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இதன் தொடர்ச்சியாக பொருளாக உதவி அனுப்பவும் இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் இருமடங்காக உயர்ந்துள்ள பொருட்களின் விலையை இலங்கை அரசு குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலை இலக்கியப் பூங்கா



## ஈரோட்டில் மூத்த தலைவர் தா.பாண்டியன்

# நினைவு மலர் வெளியீட்டு விழா

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் மறைந்த தா.பாண்டியன் நினைவு மலர் வெளியீட்டு விழா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக் குழு சார்பில் ஈரோடு பெரியார் மன்றத்தில் நடைபெற்றது.**

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பங்கேற்பு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், நினைவு மலரை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வெளியிட, அதனை கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன் பெற்றுக்கொண்டார். நினைவு மலரை வெளியிட்டு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அறிவுசார்ந்தப் போராட்டத்தை தலைமை தாங்கி வழி நடத்தியவர் தா.பாண்டியன். அவர் மகத்தான மாமனிதர் . தான் சார்ந்திருந்த இயக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். கம்யூனிஸ்ட்டுகள் தங்களின் இறுதி மூச்சு வரை சிந்திப்பவர்கள் என்பதை நிரூபித்து சென்றவர் தா.பாண்டியன். அவரது மறைவு தேசியத்திற்கு, இலக்கிய உலகிற்கு, சிந்தனையாளர்களுக்கு பேரிழப்பு. அவர் காட்டிய வழியில் பயணிக்க இளைய சமூகத்தினர் முன் வர வேண்டும். மனித நேயத்தை பேணிக் கட்டிக் காக்க வேண்டும். அதுவே தா.பாண்டியனுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி என குறிப்பிட்டார்.

விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் தோழர் தா.பாண்டியனுக்கு புகழாரம் சூட்டிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தோழர் தா.பாண்டியனின் ஆங்கிலப் புலமை அலாதியானது. அவர் ஆங்கில இலக்கியங்களின் ஆழங்களை கற்றுணர்ந்தவர். ஆங்கிலேயர்கள் எப்படி வார்த்தைகளை உச்சரிப்பார்களோ அவ்வாறே ஆங்கிலத்தை உச்சரித்து பேசும் ஆற்றலைக் கொண்டிருந்தவர் தோழர் தா.பா.

தான் என்கிற தலைக்கனம் சிறிதும் இல்லாதவர் தா.பா. மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தவர்.

காலத்தின் அரசியலை உணர்ந்து ஏற்றுக் கொள்பவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். இச்சித்தாந்தத்தை தனது வாழ்வில் முழுமையாக கடைபிடித்தவர் தோழர் தா.பாண்டியன். கம்யூனிஸ்ட் இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒரே கம்யூனிஸ்ட் இயக்கமாக மாற வேண்டும் என்பது தோழர் தா.பாண்டியனின் விருப்பமாக இருந்தது.




துணிச்சலும் ஆளுமையும் மிக்க தலைவராக திகழ்ந்தவர் தோழர் தா.பாண்டியன். எதற்கும் அஞ்சாமல் தலை நிமிர்ந்து நின்ற அனைத்து உதாரணத் தலைவர்களின் ஒட்டு மொத்த உருவம் தோழர் தா.பா., எனலாம். நாட்டில் வகுப்புவாத, பாசிச சக்திகளை முறியடிக்க மதச்சார்பற்ற சக்திகளை ஒன்றிணைக்க பாடுபடுவோம் என தோழர் தா.பாண்டியன் பெயரில் சூளுரை ஏற்போம் என குறிப்பிட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் த. ஸ்டாலின் குணசேகரன் பேசுகையில், “தனித் தன்மைமிக்க தலைவராக மகத்தான ஆளுமையுடன் திகழ்ந்த தோழர் தா.பாண்டியன் பேச்சாற்றலிலும் தனி முத்திரைப் பதித்தவர். சாமானியர்களும் எளிதில் அணுகக் கூடிய மாமனிதராக இயல்பான எளிமையின் உதாரணமாக விளங்கியவர் தோழர் தா.பா.” என்று புகழாரம் சூட்டினார்.

விழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஈவிகேஎஸ் இளங்கோவன் கலந்து கொண்டு பேசுகையில், “ தா.பாண்டியன் சிறந்த சிந்தனையாளர். பேச்சாற்றல்மிக்கவர். ஆணித்தரமாக பேசக்கூடியவர்” என்று புகழாரம் சூட்டினார்.

விழாவில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இ.திருமகன் ஈவெரா, ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்பிரமணியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ஆர்.ரகுராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 09.04.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# பருவநிலை மாற்ற பிரச்சனையை ஒன்றிய அரசு சமூக அக்கறையுடன் கையாளவில்லை

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் குற்றச்சாட்டு



**நாடாளுமன்ற மக்களவையில் 31.03.2022 அன்று பருவநிலை மாற்றம் குறித்து விதி எண் 193 கீழ் நடைபெற்ற விவாதத்தில் கே. சுப்பராயன் பேசியது பின்வருமாறு:**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த கிளாஸ்கவ் மாநாட்டில் (COP26) உலக நாடுகள் எதிர்பார்த்த ஒப்பந்தம் எதுவும் எட்டப்படவில்லை. இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள், வளரும் நாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் எதிரானதாகவே உள்ளன.

தொழிற்துறை வளர்ச்சியின் விளைவாகவே வளிமண்டலத்தில் கரியமில வாயு மற்றும் இதர விஷவாயுக்கள் உமிழப்படுகின்றன. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா அதன் பங்களிப்பை மேற்கொள்ளவில்லை என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கிளாஸ்கவ் மாநாட்டில் இறுதி உடன்பாடு எட்டப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால் இந்தியா இந்த விஷயத்தில் தலையிட்டு ஒப்பந்தத்தை நீர்த்துப் போகச் செய்தது. அமெரிக்க அழுத்தத்தின் காரணமாகவே இந்தியா அவ்வாறு செயல்பட்டதாகச் செய்தித்தாள்களில் செய்திகள் வெளியாகின. கிளாஸ்கவ் மாநாட்டு ஒப்பந்தம் நீர்த்துப் போகச் செய்ததற்குப் பின்னால் நிலக்கரி மற்றும் எண்ணெய் துறைகளில் உள்ள அம்பானி மற்றும் அதானி போன்ற உலகின் கார்ப்பரேட் பெரும்புள்ளிகள் உள்ளனர் என்று நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வளரும் நாடுகளின் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க இந்தியா செயல்படவில்லை. இந்த அரசாங்கம், அதனை கார்ப்பரேட் ஆதரவு அரசாங்கம் என்று நிரூபணம் செய்வதில் மிக உறுதியாக இருக்கிறது. கிளாஸ்கவ் ஒப்பந்தத்திலும் இது எதிரொலித்தது. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படவிருந்த இறுதி தருணத்தில் இந்தியா அவசர கதியில் ஏன் தலையிட்டது என்பதை ஒன்றிய அரசாங்கம் விளக்க வேண்டும்.

வளிமண்டலத்தில் விஷ வாயுக்கள் உமிழப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதுபோல் ஒன்றிய அரசாங்கம் முன்னிலைப்படுத்திக் கொள்கிறது. 2070 ஆம் ஆண்டில் கரியமில உமிழ்வில் பூஜ்ஜிய நிலையை இந்தியா அடைந்துவிடும் என்று இம்மாநாடு நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்பாக பிரதமர் மோடியும் பேசியுள்ளார். ஆனால், அந்த இலக்கை அடைவதற்கான செயல்திட்டம் எதுவும் இந்திய அரசாங்கத்திடம் இல்லை.

உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் பருவநிலை மாற்றம் எனும் இப்பிரச்சனையை அச்ச உணர்வுடன் கவனித்து வருகிறார்கள். இந்தியா அரசாங்கம் இந்தப் பிரச்சனையை சமூக அக்கறையுடன் கையாளவில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். கார்ப்பரேட் ஆதரவு நிலைப்பாட்டின் காரணமாகவே அரசாங்கம் இந்தப் பிரச்சனையில் உள்நாட்டிலும், உலக அரங்கிலும் தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த அடிப்படையில்தான், கிளாஸ்கவ் மாநாட்டு ஒப்பந்தத்தையும் இந்திய அரசாங்கம் நீர்த்துப் போகச் செய்துள்ளது. தவறுகளை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் சார்பாக நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

புவி வெப்பமயமாதலை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்தி கிளாஸ்கவ் வீதிகளில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி 10000 க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்ட் இளைஞர்கள் கிளாஸ்கவ் நகர வீதிகளில் போராட்டங்களில் ஈடுபட்டனர். இப்போராட்டங்களின் மூலமாக வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளுக்கு ஆதரவாகவோ அல்லது உலகம் முழுவதிலுமுள்ள சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றாற் போலவோ இந்திய அரசாங்கம் இம்மாநாட்டில் செயலாற்றவில்லை. இந்தப் பிரச்சனை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எண்ணற்ற செய்தித்தாள்களும் கவலை தெரிவித்துள்ளன. அதைப் பற்றியெல்லாம் நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.

இந்திய அரசாங்கம் இந்தப் பிரச்சனை தொடர்பான வருங்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதுடன் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் செயல்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். ஒன்றிய அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும்? பருவநிலை மாற்ற பிரச்சனையை எதிர்கொள்வதற்கான நிதிப் பங்களிப்பு தொடர்பான வாக்குறுதிகளை வளர்ந்த நாடுகள் நிறைவேற்றவில்லை. வாக்குறுதிப்படி நிதி அளிக்க வேண்டும் என்று வளர்ந்த நாடுகளை வற்புறுத்துவதற்குப் பதிலாக, இந்திய அரசாங்கம் கிளாஸ்கவ் மாநாட்டுத் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதிலேயே கவனமாக இருந்தது. இது பெரும் ஏமாற்றமளிப்பதாக இருக்கிறது.

இந்த அரசாங்கம் அதிகமாகப் பேசுகிறதே தவிர எதையும் செய்வதில்லை. அரசாங்கம், அதன் கார்ப்பரேட் ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து மக்கள் ஆதரவு என்ற நிலைப்பாட்டிற்கு மாறும்போது தான் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தமிழக மசோதாக்களை ஒன்றிய அரசுக்கு அனுப்பாமல்

# ஆளுநர் காலதாமதம் செய்வதை ஏற்க முடியாது



## சி.மகேந்திரன் பேச்சு

விருதுநகர் மாவட்டம், சுந்தரபாண்டியத்தில் வத்திராயிருப்பு வட்ட மாநாடு நடைபெற்றது. வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணி, பால்ராஜ், அம்மாசி ஆகியோர் தலைமைக்குழுவாக செயல்பட்டார். தேசிய நிர்வாககுழு உறுப்பினர் சி.மகேந்திரன் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

மோடி அரசின் மக்கள் விரோத கொள்கைகளால் மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளனர். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளதால் தன்னை யாரும் அசைக்க முடியாது என நினைக்கிறார். இலங்கையிலும் பெரும்பான்மை அரசுதான் பதவி ஏற்றது. ஆனால் மக்கள் அதிபர் மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகிறார்கள். இலங்கை அரசினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒவ்வொருவராக ராஜினாமா செய்து வருகிறார்கள். மோடி அரசின் கொள்கையினால் நெருக்கடிக்குள்ளான மக்கள் இங்கும் போராட்டத்தை ஆரம்பிப்பார்கள். விவசாயிகள் போராட்டத்தைப்போல் ஒன்றிய அரசினால் ஒன்றும் செய்யமுடியாது. தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஒன்றிய அரசுக்கு அனுப்பாமல் ஆளுநர் காலதாமதம் செய்து வருகிறார். இது ஏற்புடையது அல்ல. நம் கட்சி மக்களை திரட்டி போராட வேண்டும். கட்சிக்குள் இளைஞர்களுக்கு பொறுப்புகள் கொடுக்க தேசிய குழு முடிவெடுத்து உள்ளது. அதனடிப்படையில் கட்சியை கட்டுவோம்; மக்களிடம் செல்வோம். இவ்வாறு சி.மகேந்திரன் பேசினார்.

மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி, வி.அழகிரிசாமி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன், தவிதொச வரதராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

வட்டக்குழுவிற்கு 67 பேர்களும், நிர்வாக குழுவிற்கு 17 பேர்களும் அதில் வட்ட செயலாளராக என்.கோவிந்தன், துணை செயலாளராக பி.மகாலிங்கம், பொருளாளராக கே.சவுந்திரபாண்டியன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. வத்திராயிருப்பு வட்டத்தில் கருவூலம், காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், வருசநாடு மலைப்பாதை திட்டம், வத்திராயிருப்பில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.




### டெல்லியில் தேசிய அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில்

# தங்கம் வென்ற சிறுமிகள்

26.03.22 முதல் 28.03.22 வரை டெல்லியில் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் சிலம்பம் போட்டியில் தமிழகத்தை சேர்ந்த 138 சிறார் மற்றும் சிறுமிகள் கலந்து கொண்டனர். சென்னை ஈக்காட்டுத்தாங்கல் ஈகை ராஜ் சிலம்பம் பயிற்சி பள்ளி சார்பாக 18 சிறார் மற்றும் சிறுமிகள் கலந்து கொண்டனர். பங்கேற்ற 18 பேரில் 11 பேர் தங்கப் பதக்கம் வென்றனர். 7 பேர் வெள்ளி பதக்கம் வென்றனர். இதனை தொடர்ந்து பெற்றோர்கள், ஈகை ராஜ் சிலம்பம் பயிற்சி பள்ளியின் பயிற்சியாளர்கள் என்.வெங்கையா, ஆர்.சந்துரு, ஆர்.சந்துரு PTC ஏ.ஹேமாமாலினி ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

முதல் வகுப்பை சேர்ந்த நிகிதா, சமந்தா, யஷ்வந்த், தனஞ்ஜெய், நிதில், ராயன் மேத்திவ், தேவநாராயணன், சுமித்ரா, பாலாஜி, பிரியங்கா, ஆதித்யா ஆகியோரும், இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த தண்டிஸ்வரி, ஜஷ்வந்த், ரோஹித், கிருத்திகா, அன்பு செல்வன், வாணிஷா, சுந்தர் பிச்சைமணி ஆகியோரும் பதக்கம் பெற்றுள்ளனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.